# 4 சமூகப் பொருளாதாரம்

## நிலப்பயன்பாடு

தீர்வையைக் கணக்கிடும்பொருட்டு செங்கற்பட்டு கிராம நிலங்கள், தரத்தின் அடிப்படையில் புறம்போக்கு, மானிய நிலங்கள், வாரப்பற்று நிலங்கள் எனும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றில் புறம்போக்கு நிலங்கள் என்றால் என்ன? அவற்றின்கீழ் அடங்கும் பகுதிகள் எவையெவை? அவற்றின் பயன்பாடு, ஒரு கிராமத்தின் நில அமைப்பு அதன் தனித்தன்மைக்கு எந்தவிதத்தில் காரணமாக அமைகிறது போன்றவை பற்றியும், மானிய நிலங்கள் என்றால் என்ன? அவை யார் யாருக்கு எந்த அளவில் அளிக்கப்பட்டன? மொத்த விளைநிலத்தின் மானிய நிலங்கள் எத்தனை சதவிகிதம் என்பன பற்றியும், வாரப்பற்று நிலங்களாவன எவை? அவற்றின் பிரிவுகள், மொத்த கிராம நிலப்பரப்பில் அவை எத்தனை சதவிகிதம் ஆகியவை பற்றிய செய்திகளை இந்த ஆய்வு வெளிப்படுத்தும்.

பதினெட்டாம் நூற்றாண்டில், செங்கற்பட்டு கிராம நிலங்களின் தரவாரி பிரிவுகள் பற்றியும் நிலப் பயன்பாடு பற்றியும் பின்வரும் அட்டவணைகள் வாயிலாகக் காணலாம்.

## புறம்போக்கு நிலங்கள்

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பத்துக் கிராமங்களின் புறம்போக்கு நிலங்களில் அமைந்திருக்கும் பகுதிகள், அவற்றின் எண்ணிக்கை, அளவு (*area*) ஆகியவற்றுடன் அட்டவணை 1-அ ல் பட்டியலிடப் பெற்றிருக்கின்றன. அவற்றை நோக்கும்பொழுது கோவில், குளம், குட்டை, ஆறு, ஏரி, தாங்கல், மடு, தோப்பு, தோட்டம், துரவு, களத்துமேடு, மந்தைவெளி, ஊர்நத்தம், சேரிநத்தம், மலை, காடு, பாட்டை வழி, ருத்திரபூமி (மயான பூமி) போன்ற பகுதிகள் அடங்கிய நிலப்பிரிவே புறம்போக்கு நிலங்கள் எனக் குறிப்பிடப்பெறுவது தெளிவாகிறது. இவை பெரும்பான்மையும் புஞ்சை நிலப் பகுதிகளாகவே காணப்படுகின்றன. எனினும் திருக்கச்சியூர், ஸ்ரீபெரும்புதூர், கல்குளம் ஆகிய கிராமங்களில் புஞ்சை நிலங்கள் மட்டுமின்றி நஞ்சை நிலப் பகுதிகளும் புறம்போக்கு நிலங்களின்கீழ் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. (இவற்றைப் பின்னிணைப்பில் காணப்படும் மேற்படி கிராமக் கணக்குகளிலிருந்து அறியலாம்) இந்த நஞ்சை நிலங்களில் அமைந்திருக்கும் பகுதிகள் பெரும்பாலும் ஏரி, மடு, தாங்கல் தோப்பு, தோட்டங்களாக இருப்பது தெரிகிறது.

*தீர்வை கணக்கிடப்படும்பொழுது, புறம்போக்கு நிலங்கள், மானிய நிலங்கள் ஆகியவற்றை விடுத்து, வாரப்பற்று நிலங்களிலிருந்து தீர்வை கணக்கிடப் பெறுகின்றது. இவற்றிலிருந்து புறம்போக்கு நிலங்களுக்குத் தீர்வை இல்லை என்று தெரிகிறது.*

*பொதுவாக, சமுதாய நன்மை கருதியோ அல்லது சாகுபடிக்குத் தகுதியின்மை யினாலோ குடிகள் வசம் விடப்படாததும் தீர்வை விதிக்கப்படாததுமாகிய நிலங்கள் புறம்போக்கு நிலங்கள் எனப்படும். இவற்றின்கீழ் அடங்கும் பகுதிகள் பற்றிய விளக்கங்கள் வருமாறு.*

## கோயில்கள்

*ஒவ்வொரு கிராமமும் கோயில்கள் பல அமையப்பெற்று விளங்கின. இந்த 10 கிராமங்களிலும் சேர்த்து மொத்தம் 117 கோயில் இருந்ததைக் காணமுடிகிறது. ஊரின் மையப்பகுதியில் தொடங்கி, பெரிதும் சிறிதுமாக கிராமம் முழுவதும் பரவலாகக் கோயில்கள் அமையப்பெற்றிருந்தன. ஈஸ்வரன், பெருமாள், அம்மன் கோயில்கள் போன்ற பெரிய கோயில்களுடன் சிறு தெய்வங்களான ஐயனார், பிடாரி, தர்மராசா கோயில்களும் அமையப்பெற்றிருந்தமை இப்பகுதியில் பெருந்தெய்வ வழிபாட்டுடன் சிறுதெய்வ வழிபாடும் பரவியிருந்ததை உணர்த்துவதாக உள்ளது. பெரிய கோயில்களுக்கு மட்டுமின்றி, சிறுதெய்வக் கோயில்களுக்கும் கிராம மிராசுகளுக்குரிய மானியங்களும், மேரைகளும் வழங்கப்பட்டு வந்தன.*

*கோயில்களைப் போலவே இஸ்லாமியர்கள் வாழ்ந்த பகுதியில் மசூதி, தர்கா போன்றவை அமைந்திருந்தன. கோவளத்தில் கோயில்களுடன், இரு தர்காக்களும், மசூதியும் இருந்தன. கோயில்களைக் காட்டிலும் எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் மசூதி, தர்கா ஆகியவை அமைந்திருந்த நிலப்பரப்பு, கோயில்களின் நிலப்பரப்பைக் காட்டிலும் 4 மடங்கு அதிகமாக இருந்தது. கோயில்களைப் பற்றிய விரிவான செய்திகளை அட்டவணை -9ல் காணலாம். ஒவ்வொரு கிராமத்திலும் அமைந்துள்ள கோயில்களின் எண்ணிக்கை, அளவு (area) அவை பெற்றுவந்த மானியங்கள் மேரைகள் ஆகியவற்றிலிருந்து, கோயில்கள் மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கையும், அவை மக்களின் வாழ்வியலோடு கொண்டிருந்த நெருங்கிய தொடர்பையும் நன்கு உணரமுடிகிறது.*

*கோவிலை அடுத்து அனைத்து கிராமங்களிலும் அதிகமாக அமைந்திருக்கக்கூடிய பகுதிகளாக குளம், குட்டை, தோப்பு, தோட்டம், பூந்தோட்டம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.*

## பூந்தோட்டம்

*சுமார் 40க்கும் மேற்பட்ட பூந்தோட்டங்கள் இந்த 10 கிராமங்களில் இருந்தன. அவை பெரும்பாலும் கோயில் தோட்டங்களாகவும், தனியார் தோட்டங்களாகவும் இருந்தன. கோயில்கள் அதிகம் இருந்ததால் பூந்தோட்டங்களும் அதிகமாக இருந்திருத்தல் கூடும்.*

## தோப்புத்தோட்டம்

பூந்தோட்டங்கள் தவிர பல்வேறு வகை தோப்புகளும் தோட்டங்களும் இந்த 10 கிராமங்களில் பரவலாகக் காணப்பட்டன. இவற்றின் எண்ணிக்கை சுமார் 30க்கும் மேற்பட்டதாக உள்ளது. பூந்தோட்டங்களைப் போலவே தோப்புகளும் தோட்டங்களும் கோவில் மற்றும் தனியார் தோட்டங்களாகக் காணப்பட்டன. இவை பெரும்பாலும், மா, புளி, இலுப்பை, நெல்லி, மாந்தோப்புகளாக உள்ளன. இந்த 10 கிராமங்கள் மட்டுமல்லாமல் வேறு சில கிராமங்களையும் கணக்கில் எடுத்திக்கொண்டால் தென்னை, மா, பலா, வாழை, கமுகு, எலுமிச்சை போன்ற தோட்டங்களும் தோப்புகளும் இருந்திருப்பது தெரியவருகிறது.

பெரிய காஞ்சிபுரம் போன்ற ஊர்களில் (பெரிய காஞ்சிபுரம் இந்த 10 கிராமங்களில் அடங்கவில்லை) வாரப்பற்றுக்குரிய சர்க்கார் தோட்டங்கள் மானியங்களாக வழங்கப்பட்டிருந்தன.

தோட்டங்கள் என்று பார்க்கும்பொழுது கல்குளம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள வீடுகள் அனைத்தும் பெரிய தோட்டங்களுடன் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வூரில் வீடுகளை விடவும் தோட்டங்கள் பெரிதாக அமைந்திருந்தன. இவ்வூரின் தனிச்சிறப்பாக இவற்றைக் கருதலாம்.

## குளம் குட்டைகள்

இந்தக் கிராமங்கள் அனைத்தும் குளம் குட்டைகள் சூழ அமைந்திருப்பதை இந்த அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது. இந்த 10 கிராமங்களில் அமைந்துள்ள குளம் குட்டைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் மொத்தம் 82 குளங்களும் 67 குட்டைகளும் இருப்பதைக் காணமுடிகிறது. இவை அனைத்தும் கோயில்கள், தோப்பு, தோட்டங்கள், வயல்வெளிகள் பல்வேறுவித மக்களின் பயன்பாட்டிற்கென அமைந்த இடங்கள், சாவடி, மண்டபம், எல்லைப்புறங்கள் எனப்பலதரப்பட்ட இடங்களையொட்டி அமைந்திருந்தன.

குளம் குட்டைகள் தவிர ஒவ்வொரு கிராமமும் ஆறு, ஏரி, தாங்கல், கலிங்கல், மடு, கிணறு, துரவு, கயம், நடபாவி என ஏதாவதொரு வகையில் நீர்ப்பாசன வசதியைப் பெற்றிருந்தன. அவற்றைத் தனியே காணலாம். இந்த 10 கிராமங்களுள் 6 கிராமங்களில் 8 ஏரிகள் சுமார் 532 ½ காணி நிலப்பரப்பில் அமைந்திருந்தன. பெருநகரில் மட்டும் 3 ஏரிகள் இருந்தன. அவற்றுடன் 3 மடுக்களும் இருந்தன. மேலும் செய்யாறும் இந்நகரின் வழியே பாய்ந்து இப்பகுதியை வளப்படுத்தியது. 18ம் நூற்றாண்டில் உயர் விளைச்சலைத் தந்த கிராமங்களுள் பெருநகரும் ஒன்றாகத் திகழ்ந்தது. உள்ளாவூர், ஸ்ரீபெரும்புதூர், மாங்காடு ஆகிய கிராமங்களும் உயர் விளைச்சலைத் தந்த கிராமங்களுள் அடங்கும் என்பதை ஏற்கெனவே கண்டோம்.

## களத்துமேடு

இக்கிராமங்கள் விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்டன. ஆதலின் ஒவ்வொரு ஊரிலும் களத்துமேடுகள் அமைவது இயல்பாயிற்று. உள்ளாவூர்,

*பெருநகர் ஆகிய ஊர்களில் 6 களத்துமேடுகள் 26 ¼ காணி நிலப்பரப்பில் அமைந்திருந்தன. ஸ்ரீபெரும்புதூரில் 12 களத்துமேடுகள் இருந்தன. இவை அப்பகுதிகளில் வேளாண்மை சுறுசுறுப்பாகவும், பெருவாரியாகவும் நடந்து வந்ததைக் காட்டுவதாக உள்ளன.*

## *மந்தவெளி*

*மேய்ச்சல் நிலங்களான மந்தைவெளிகளும் இக்கிராமங்களில் பரவலாகக் காணப்பட்டன. கிட்டதட்ட ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு மந்தைவெளி இருந்ததைக் காணமுடிகிறது. வேளாண்மை முதற்தொழிலானதால் கால்நடைகளின் தேவை இயல்பாயிற்று. எனவே கால்நடைகளுக்காகவே திட்டமிட்டுச் சில நிலங்கள் மந்தைவெளிப்பகுதிகளாக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனலாம்.*

## *கிராமநத்தம்*

*நத்தம் என்பது குடியிருப்புப் பகுதியைக் குறிப்பதாகும். விரும்பியும் நெருங்கியும் இணைந்து வாழ்கின்ற இடம் நத்தம் எனப்படும். பொதுவாக குடியிருப்புப் பகுதிகள் இக்கிராமங்களில் கிராமநத்தம், சேரிநத்தம் என இரு பிரிவுகளைக் கொண்டு விளங்கின.*

*கிராமநத்தங்களில் வீடுகள் புழக்கடையுடன் அமையப் பெற்றிருந்தன. தெருக்கள் நாராசம் (குறுக்குத் தெருக்கள்) ஆகியவற்றுடன் பெரும்பாலும் இன்று கிராமங்களில் காணப்படும் அமைப்புடனேயே காணப்பட்டன. சேரி நத்தத்திலும் வீடுகள் புழக்கடைகளைப் பெற்று விளங்கின.*

## *சாவடி மண்டபம்*

*இக்கிராமங்கள் மண்டபம், சாவடி ஆகியவற்றையும் கொண்டு விளங்கின. பெரும்பாலும் மண்டபங்கள் கோயில், குளம், குட்டை அருகிலும் அமைந்திருந்தன. தண்ணீர்ப்பந்தல் போன்றவை சாவடிகளில் இயங்கி வந்ததாகவும் காணமுடிகிறது.*

## *ருத்திரபூமி*

*சுடுகாடு ருத்திரபூமி என இந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊரிலும் சராசரியாக இரண்டு அல்லது மூன்று ருத்திரபூமிகள் காணப்பட்டன. பெரும்பாலும் பிராமணர் ருத்திரபூமி, சூத்திரர் ருத்திரபூமி, சேரி ருத்திரபூமி என மூன்று வகைகளில் காணப்பட்டன. பெருநகரில் வழக்கமாகக் காணப்படும் மூன்று ருத்திர பூமிகளுடன் கம்மாளர் ருத்திரபூமி ஒன்றும் இருந்தது.*

*இக்கிராமங்கள் மேற்கூறிய பகுதிகளைத் தவிர, பிற பகுதிகளான மலை, காடு, களர் (உவர்நிலம்) வம்பர், வெளி (மணல்வெளி) கழிவெளி, பாழ்மேடு, கல்மேடு, மோறை ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்கின.*

*கோவளத்தில் மொத்த நிலமும் புறம்போக்கு நிலங்களே. விளைநிலங்கள் ஏதுமில்லை. கழிவெளி காணப்படுவதால் இங்கு உப்பு தயாரிக்கும் தொழில் நடந்துவந்தது. மேலும் இது ஒரு வாணிபத் தளமாக விளங்கியது.*

இதுவரையில் கூறப்பட்ட அனைத்துச் செய்திகளையும் கூர்ந்துநோக்கும்பொழுது செங்கற்பட்டு கிராமங்கள் ஒவ்வொன்றும் அவ்வவற்றின் நில அமைப்பு, தன்மை இவற்றிற்கேற்ப தரம் பிரிக்கப்பட்டு முறையாகப் பயன்படுத்தப்பட்டு வந்தமை தெளிவாகிறது. மேலும் இக் கிராமங்களின் நில அமைப்பு அவ்வவற்றின் தனித்தன்மைக்குக் காரணமாய் விளங்கியதும் புலப்படுகிறது.

### மானிய நிலங்கள்

மானிய நிலங்கள் என்பன சோழர்கால இறையிலி நிலங்களை ஒப்ப அமைந்த கொடை நிலங்களாகும். கிராமத்தின் மொத்த நிலப்பரப்பில் புறம்போக்கு நிலங்களை நீக்க மீதமுள்ள நிலங்கள் விளைநிலங்களாகக் காணப்படுகின்றன. இந்த விளைநிலங்களுள் 25% மானியத்திற்கென ஒதுக்கப்பட்ட நிலங்களாகும். இவை தும்பால் மானிய நிலங்கள் என இந்த ஆவணங்களில் குறிப்பிடப் பெறுகின்றன. இம்மானிய நிலங்கள் எந்தெந்தப் பெயரில் யார் யாருக்கு வழங்கப்பட்டது என்பதை அட்டவணை 1- ஆ காட்டுகிறது.

கிராம நிர்வாகப் பணியில் ஈடுபட்ட பல்வேறுவித மக்களுக்கு இம்மானியங்கள் அளிக்கப்பட்டன. பொதுவாக, இம் மானியங்கள் தரப்படி மானியம், தும்பால் மானியம், சர்வ மானியம், அர்த்த மானியம், மேல்வாரபாதி மானியம், சன்னது மானியம் எனப்பலவித பெயர்களில் வழங்கப்பட்டிருப்பினும் இவற்றைப் பின்வரும் இருபிரிவுகளில் அடக்கிக் காணலாம்.

- கிராம மிராசு மானியம்
- அன்னியர் மானியம்

### கிராம மிராசு மானியம்

கிராம நிர்வாகத்துடன் தொடர்புடைய பின்வரும் பல்வேறு மக்களுக்கு இம் மானியங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

- சமயம், கல்வி, கலாச்சாரத் துறையினர்.
- கிராம நிர்வாக அலுவலர் (கணக்கு, காவல்தூக்கிரி, சராப்பு போன்றோர்)
- கிராம இன்றியமையாப் பணியாளர் (வண்ணான், நாவிதன் போன்றோர்)

### அன்னியர் மானியம்

ஒரு கிராமத்திலிருந்து அந்த கிராமத்தைச் சேர்ந்த மிராசுகளுக்கு மட்டுமின்றி அக் கிராம நிர்வாகத்துடன் தொடர்புடைய பிற கிராமத்தவர்க்கும் இந்த மானியங்கள் அளிக்கப்பட்டு வந்தன. இவை அன்னியர் மானியம் என அழைக்கப்பட்டன.

இம்மானிய நிலங்கள் மேலும் பழமானியம் நஞ்சை, பழமானியம் புஞ்சை, புதுமானியம் நஞ்சை, புதுமானியம் புஞ்சை எனப் பிரிக்கப்பட்டிருந்தன. இவற்றில் பழமானியம் என்பது கிராம மிராசுதாரர்களுக்கு வழக்கமாகத் தொடர்ந்து

வழங்கப்பட்ட மானிய நிலங்கள் ஆகும். புதுமானியம் என்பது புதிதாக அரசு உத்தரவுடன் (*Deed or Sunnud*) வழங்கப்பட்டன. இவற்றைப் பின்னிணைப்பில் காணலாம்.

ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் கிராம மிராசு மற்றும் அன்னியர்களுக்கு எவ்வளவு மானிய நிலங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன என்பதை அட்டவணை 1-ஆ விளக்கமாகக் காட்டுகிறது.

அட்டவணை 1ஆ மானிய நிலங்கள்

| மானியம் | | உள்ளாவூர் | கல்குளம் | கோடம்பாக்கம் | கோவளம் | சி.பெ. கோவில் | திருக்கச்சியூர் | திருப்பாசூர் | பெருநகர் | மாங்காடு | ஸ்ரீபெரும்புதூர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காணி | | | | | | | | | |
| கிராம மிராசு மானியம் தும்பால் பழமானியம் | ந | 52 1/2 | 29 | 20 1/2 | | 10 ¾ | 65 | 58 ½ | 39 ½ | 59 3/8 | 77 3/4 |
| | பு | 11 | 15 ¾ | 2 | | 9 | 10 ½ | 6 | 43 ¾ | | 35 |
| தும்பால் புதுமானியம் | ந | | | 2 ½ | | | 1 ½ | 90 | | 5 ¾ | 10 ½ |
| | பு | | | | | | | 11 | | | |
| மேல்வாரபாதி பழமானியம் | ந | 5 ¾ | 2 ¼ | | | | 11 ¼ | | 6 ¾ | | 12 ¼ |
| | பு | | 2 ¾ | | | | 1 ½ | | | | |
| மேல்வாரபாதி புதுமானியம் | ந | | | | | | ¼ | | | | |
| | பு | | | | | | | | | | |

அட்டவணை 1ஆ மானிய நிலங்கள் (தொடர்ச்சி)

| மானியம் | | உள்ளாவூர் | கல்குளம் | கோடம்பாக்கம் | கோவளம் | சி.பெ. கோவில் | திருக்கச்சியூர் | திருப்பாசூர் | பெருநகர் | மாங்காடு | ஸ்ரீபெரும்புதூர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காணி | | | | | | | | | |
| அன்னியர் மானியம் தும்பால் பழமானியம் | ந | | | 35 ¼ | | | | 12 ½ | 17 ¾ | 121 ½ | 19 ½ |
| | பு | | | | | | | | | | 2 ¾ |
| தும்பால் புதுமானியம் | ந | | 1 ½ | 3 ½ | | | | 25 | 2 ½ | 21 3/8 | 7 ¼ |
| | பு | | ¾ | | | | | | | | |
| மேல்வாரபாதி மானியம் | ந | | | | | | | | | | |
| | பு | | | | | | | | | | |
| கூடுதல் | | 69 ¼ | 52 | 63 ¾ | | 19 ¾ | 90 | 203 | 111 ½ | 208 | 165 |

அட்டவணை 1இ வாரப்பற்று நிலங்கள்

| **வாரப்பற்று நிலங்கள்** | உள்ளாவூர் | கல்குளம் | கோடம்பாக்கம் | கோவளம் | செ.பெ. கோவில் | திருக்கச்சியூர் | திருப்பாசூர் | பெருநகர் | மாங்காடு | qபெரும்பு தூர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செய்கால் - நஞ்சை | 441 ¾ | 110 | 193 | - | 2 ¼ | 112 | 214 | 330 | 395 5/8 | 410 ½ |
| செய்கால் - புஞ்சை | 24 | | 25 | - | 20 | 15 | 9 | 370 | 8 ½ | 69 ½ |
| கரம்பு - நஞ்சை | 400 | | 25 ½ | - | | | 50 | 32 ¼ | | 128 |
| கரம்பு - புஞ்சை | | 30 ¾ | | - | | | 81 | 66 3/8 | | 180 |
| கூடுதல் | 865 ¾ | | 243 ½ | - | 22 ¼ | 127 | 354 | 798 5/8 | 404 1/8 | 788 |

அட்டவணை 1ஈ மொத்த நிலப்பரப்பில் புறம்போக்கு, மானிய, வாரப்பற்று நிலங்களின் சதவிகிதம்

| நிலப்பிரிவு | உள்ளாவூர் | | கல்குளம் | | கோடம்பாக்கம் | | கோவளம் | | சி.பெ. கோவில் | | திருக்கச்சியூர் | | திருப்பாசூர் | | பெருநகர் | | மாங்காடு | | ஸ்ரீபெரும்புதூர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | காணி | % | காணி | % | காணி | % | காணி | % | காணி | % | காணி | % | காணி | % | காணி | % | காணி | % | காணி | % |
| புறம்போக்கு | 165 | 15 % | 104 ½ | 32 | 142 ¾ | 32 | 480 | 100 | 71 | 63 | 314 ½ | 59 | 273 | 33 | 865 7/8 | 49 | 126 ½ | 16 | 617 | 39 |
| மானியம் | 69 ¼ | 6 | 52 | 15 | 63 ¾ | 14 | - | - | 19 ¾ | 18 | 90 | 17 | 203 | 24 | 111 ½ | 6 | 205 | 28 | 167 | 11 |
| வாரப்பற்று | 865 ¾ | 79 | 179 ½ 737 ¼ | 53 | 243 ½ | 54 | - | - | 22 ¼ | 19 | 127 | 24 | 354 | 43 | 798 5/8 | 45 | 404 1/8 | 56 | 788 | 50 |
| கூடுதல் | 1100 | 100 | 338 | 100 | 450 | 100 | 480 | 100 | 43 | 100 | 53 ½ | 100 | 830 | 100 | 1776 | 100 | 738 5/8 | 100 | 1570 | 100 |

### வாரப்பற்று நிலங்கள்

வரிவிதிப்பிற்குட்பட்ட விளைநிலங்களே வாரப்பற்று நிலங்கள் என இந்த ஆவணங்களில் குறிப்பிடப் பெறுகின்றன. கிராம மொத்த நிலப்பரப்பில் 50% வாரப்பற்றுக்குரிய நிலங்களாகக் காணப்பட்டன.

இந்நிலங்கள் பின்வரும் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

- வாரப்பற்று செய்கால் நஞ்சை
- வாரப்பற்று செய்கால் புஞ்சை
- வாரப்பற்று கரம்பு நஞ்சை
- வாரப்பற்று கரம்பு புஞ்சை

ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கிராமங்கள் ஒவ்வொன்றிலும் இப்பிரிவுகள் எந்த அளவில் அமைந்திருந்தன என்பது அட்டணை 1-அ வில் விளக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 1ஈ யில் ஒவ்வொரு கிராமத்திலும் மொத்த நிலப்பரப்பில் புறம்போக்கு நிலங்களின் விழுக்காடு எவ்வளவு? மானிய நிலங்கள் எவ்வளவு? வாரப்பற்று நிலங்கள் எவ்வளவு என்பன தனித்தனியே பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

### நீர்நிலைகள்

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்ற இந்தப் பத்து கிராமங்களிலும் காணப்படும் ஆறு, ஏரி, குளம் போன்ற பல்வேறுவித நீர்நிலைகளின் எண்ணிக்கை, அவற்றின் பரப்பளவு, அமைவிடம் பயன்பாடு போன்றவை பற்றி இங்குக் காணலாம்.

அட்டவணை - 2 நீர்நிலைகள்

| எண். | நீர்நிலைகள் | உள்ளாவூர் | | கல்குளம் | | கோடம்பாக்கம் | | கோவளம் | | சி.பெ.கோ. | | திருக்கச்சியூர் | | திருப்பாசூர் | | பெருநகர் | | மாங்காடு | | ஸ்ரீ பெ.புதூர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எ | அ | எ | அ | எ | அ | எ | அ | எ | அ | எ | அ | எ | அ | எ | அ | எ | அ | எ | அ |
| 1. | ஆறு | | | | | | | | | | | | | | | | | | | | |
| 2. | ஏரி | | | 1 | 35 ½ | 1 | 18 | | | | | 1 | 40 | 1 | 80 | | | | | 1 | 100 |
| 3. | ஏரி கீழ்பள்ளம் | | | | | | | | | | | | | | | | | | | 2 | 3 |
| 4. | கயம் | | | | | | | | | | | | | 1 | 2 | | | | | | |
| 5. | கலிங்கல் | | | | | | | | | | | | | | | | | | | 2 | 155 ½ |
| 6. | கிணறு | | | | | | | | | 5 | ½ | 8 | 1 | | | | | | | | |
| 7. | குட்டை | 20 | 14 | 4 | 2 | | | 10 | | 2 | 5 | | 7 | 22 | 12 ½ | * | * | | | 2 | 1 ½ |
| 8. | குளம் | 2 | 4 | 2 | 6 ¾ | 13 | 17 | 2 | 15 | 2 | 5 | 6 | 6 | 3 | 7 ½ | * | * | 14 | 104 ¼ | 38 | 35 ½ |

அ - அளவு காணியில்

எ - எண்ணிக்கை

* - ஏடுகளில் விடப்பட்டுள்ளன.

அட்டவணை - 2 நீர்நிலைகள் (தொடர்ச்சி)

| எண். | நீர்நிலைகள் | உள்ளாவூர் | | கல்குளம் | | கோடம்பாக்கம் | | கோவளம் | | சி.பெ.கோ. | | திருக்கச்சியூர் | | திருப்பாசூர் | | பெருநகர் | | மாங்காடு | | ஸ்ரீபெ.புதூர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எ | அ | எ | அ | எ | அ | எ | அ | எ | அ | எ | அ | எ | அ | எ | அ | எ | அ | எ | அ |
| 9. | தாங்கல் | | | | | 1 | 7 | | | | | | | 1 | 30 | | | | | 6 | 25 |
| 10. | துரவு | | | | | 5 | ¼ | | | | | | | 2 | ¾ | | | 2 | ¼ | | |
| 11. | நடபாவி | | | | | | | | | | | | | 1 | 3/8 | | | | | | |
| 12. | மடு | 2 | 36 | | | | | | | | | | | 1 | 15 | 3 | 20 | | | | |
| 13. | வாய்க்கால் | | | | | | | | | | | | | 1 | 5 | | | 1 | 8 | 1 | 4 |
| | கூடுதல் | 24 | 54 | 7 | 44 ¼ | 20 | 321 1/4 | 10 | 15 | 9 | 10 ½ | 22 | 54 | 33 | 153 1/8 | 6 ½ | 420 | 17 | 18 ½ | 52 | 324 ½ |

அ - அளவு காணியில்

எ - எண்ணிக்கை

* - ஏடுகளில் விடப்பட்டுள்ளன.

இந்தப் பத்து கிராமங்களிலும் ஆறு, ஏரி, தாங்கல், ஏரி கீழ் பள்ளம், குளம், குட்டை, கிணறு, துரவு, மடு, கலிங்கல், வாய்க்கால், கயம், நடபாவி எனப் பதின்மூன்று வகையான நீர்நிலைகள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. இவற்றின் மொத்த எண்ணிக்கை **206** ஆகவும் இவற்றின் பரப்பளவு **1127 ½** காணி ஆகவும் காணப்படுகின்றன. இந்தப் பத்து கிராமங்களின் மொத்த நிலப்பரப்பில் நீர்நிலைகளின் பரப்பளவு **15%** ஆகவும், மொத்த புறம்போக்கு நிலத்தில் **41%** ஆகவும் உள்ளது.

அட்டவணை-**2**ல் ஒவ்வொரு கிராமத்திலும் அமைந்துள்ள நீர்நிலைகள் அவற்றின் எண்ணிக்கை மற்றும் பரப்பளவுடன் பட்டியலிடப் பெற்றுள்ளதைக் காணலாம்.

இவற்றை நோக்கும்பொழுது இந்தப் பத்து கிராமங்களையும் சேர்த்து மொத்த நிலப்பரப்பில் விளைநிலங்களுக்கு அடுத்தபடியாக அதிக பரப்பளவில் அமைந்திருப்பவை நீர்நிலைகளே எனலாம்.

இனி ஒவ்வொரு விதமான நீர்நிலையும் மொத்த நீர் நிலைகளின் பரப்பளவில் எத்தனை விழுக்காடுகள் அமைந்திருந்தன என்பதைக் காண்போம். பரப்பளவின் அடிப்படையில் இவற்றைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

**நீர் நிலைகள் பரப்பளவு - சதவிகிதத்தில்**

| | | |
|---|---|---|
| ஏரி | - | **46.5** |
| கலிங்கல் | - | **13.8** |
| ஆறு | - | **13.3** |
| குளம் | - | **9** |
| மடு | - | **6.3** |
| தாங்கல் | - | **5.5** |
| குட்டை | - | **3.1** |
| வாய்க்கால் | - | **1.5** |
| ஏரிகீழ்பள்ளம் | - | **0.3** |
| கயம் | - | **0.2** |
| கிணறு | - | **0.13** |
| துரவு | - | **0.1** |
| நடபாவி | - | **0.07** |

இவற்றை நோக்கும்பொழுது மிக அதிக பரப்பளவில் அமைந்திருக்கக் கூடிய நீர்நிலைகள் ஏரிகளே எனலாம். இந்தப் பத்து ஊர்களுள் கல்குளம், கோடம்பாக்கம், திருக்கச்சியூர், திருப்பாசூர், பெருநகர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய ஆறு ஊர்களும்

ஏரிகளைப் பெற்றிருந்தன. இவற்றுள் பெருநகர் மட்டும் 3 ஏரிகளைக் கொண்டு விளங்கியமை குறிப்பிடத்தக்கதாம்.

ஏரிகளுக்கு அடுத்தபடியாக கலிங்கல் மற்றும் ஆறு இரண்டும் மிக அதிக பரப்பளவில் அமைந்திருந்தன. எனினும் எண்ணிக்கையின் அடிப்படையில் இவை குறைவாகவே உள்ளன. இந்த 10 கிராமங்களிலும் சேர்த்து மொத்தம் 2 கலிங்கல்களும் 1 ஆறு மட்டுமே காணப்படுகின்றன. இவற்றுக்கு அடுத்தபடியாக எண்ணிக்கை மற்றும் பரப்பளவு இரண்டிலும் அதிகமாகக் காணப்படுவன குளம் குட்டைகள் எனலாம். அனைத்து கிராமங்களுமே குளம் குட்டைகளைப் பெற்று விளங்கின. குளம் குட்டைகள் அவை அமைந்திருக்கும் இடங்களையும், பெயர்களையும் ஒட்டிப் பார்க்கும்பொழுது பாசனத்தைவிட பொதுப் பயன்பாட்டிற்கென அதிகமாக அமைந்திருத்தல் கூடும் என்றே கருதத் தோன்றுகிறது. அமைவிடம், பெயர்விடம் இவற்றின் அடிப்படையில் இவற்றைப் பலவாறாக வகைப்படுத்தலாம்.

- கோயிலையொட்டியும், தெய்வங்களின் பெயர்களுடனும் காணப்படும் குளம் குட்டைகள்.

  எ.கா. திருக்குளம், சந்திர புஷ்கரணி, கூர்மக்குளம், வெங்கீசுவரர் குளம், அம்மன் குளம், அனுமார் குளம் போன்றவை.

- எ.கா. அமைவிடத்தையொட்டிய பெயர்கள் உடையவை.

  எ.கா. எல்லைக் குட்டை, சின்னாயக்கர் மண்டபத்துக் குட்டை, மேட்டுப்பாளையம் குளம், நல்லாங்குப்பம் குளம், மாங்குழி குட்டை, சேரி குட்டை, ஊருக்கு நடுத்தெரு குளம், ஊருக்குத் தெரு குட்டை போன்றவை.

- பல்வேறு இனத்தவர் பெயர்களில் அமைந்தவை

  எ.கா. வெள்ளாளர் குட்டை, முசிலி நாயக்கர் குட்டை, பக்கிரிகுட்டை, ஷேக் மீரா குட்டை, செட்டி குளம், வடுகன் குட்டை.

- தோப்பு, தோட்டம், பூந்தோட்டங்களையொட்டி அமைந்தவை

  எ.கா. இந்திரவனக் குட்டை, மாங்குழி குட்டை, பூந்தோட்டம் குட்டை போன்றவை. ஸ்ரீ பெரும்புதூரில் பூந்தோட்டங்கள் அதிகம் காணப்பட்டதால் அவற்றிற்கருகே பெரும்பாலும் குளங்கள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது (காண்க பின்னிணைப்பு).

- கிராம நிர்வாகப் பணியாளர் பெயர்களில் அமைந்துள்ள குளம் குட்டை
  எ.கா. கணக்கு குட்டை, காவல் குட்டை, தூக்கிரி குட்டை, நாவிதன் குளம், வண்ணான் குளம், வள்ளுவன் குட்டை, வைத்தியன் குட்டை, தாதன் குட்டை, வெட்டி குளம், தட்டான் குளம், குடுக்கள் குளம்

இவற்றை நோக்கும்பொழுது மானியங்கள், மேரைகளில் பங்கு வழங்கப்பட்டது போல நீர் நிலைகளைக் குறித்தும் சில உரிமைகளை இவர்கள் பெற்றிருத்தல் கூடும் எனக் கருதத் தோன்றுகிறது.

- நீரின் தன்மைக்கேற்ப பெயர்களமைந்தவை
  எ.கா. இளநீர் குளம், சுண்ணாம்பு குட்டை, மஞ்சநீர் குளம் போன்றவை
- வேறு சில பெயர்களில் காணப்படுபவை
  எ.கா. அக்கண்ணர் குளம், தங்கமுடையான் குளம், பாண்டியன் குளம், அமரர் குளம், விளாத்தி குளம், தானன் குளம், பாக்கியமுடையார் குளம், சக்கரம் பட்டடை குளம், கட்டுக்கேணிகுளம், குடலைக் குளம் போன்றவை

குளம் குட்டைகளுக்கு அடுத்ததாக மடு, தாங்கல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஏரிகள் இல்லாத இடங்களில் கலிங்கல், வாய்க்கால்கள் மூலம், ஏரிகளிலிருந்து நீர் கொண்டு வரப்படுவதை சில கிராமங்களில் காணமுடிகிறது. காட்டாக, உள்ளாவூரில் ஏரி, ஆறு இவைகள் இல்லை. எனினும் இரண்டு மடுக்கள் காணப்படுகின்றன. தென்னேரி, ஸ்ரீவரம் ஆகிய ஏரிகளிலிருந்து கலிங்கல்கள் மூலம் இம் மடுக்களுக்கு நீர்கொண்டு வரப்பட்டதை இந்த ஆவணங்கள் தெரிவிக்கின்றன. இதுபோலவே ஆறு, ஏரிகளிலிருந்து நீரைக் கொண்டு வருவதற்கு வாய்க்கால் அமைக்கப்பட்டிருந்ததை மாங்காடு, திருப்பாசூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் காணலாம். இவை தவிர நடபாவி, துரவு, கயம், ஏரி கீழ் பள்ளம் போன்றவையும் காணப்பட்டன.

இதுபோன்ற பாசனத்திற்கும் மக்கள் பயன்பாட்டிற்குமென நீர்நிலைகள் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டிருந்தன. அத்துடன் அவை முறையாகப் பராமரிக்கப்பட்டும் வந்ததை இந்த ஆவணங்களில் காணப்படும் சில செய்திகள் கூறுகின்றன. ‘ஏரியளவு’ ஏடுகள் ஏரிகள், மதகு, கலிங்கல்கள், கால்வாய்கள் போன்றவற்றை முறையாகச் செப்பனிடுவதற்கும், புதிதாகக் கட்டுவதற்கும் ஆகக்கூடிய செலவினையும் அவற்றின் வாயிலாகக் கிடைக்கக்கூடிய வருவாயினையும் மதிப்பிட்டுக் கூறுகின்றன. மாங்காடு சீமை ஆவணத்தில் ‘ஏரியளவு’ ஏட்டில் புதிதாய் ஏரி, தாங்கல் போடுவதற்கு வளமில்லை’ என்று குறிப்பிடப்பட்டதிலிருந்து நில அமைப்பிற்கேற்ப முறையாகப் பாசனவசதி திட்டமிட்டு செய்யப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. மேலும் ஏரிக்கென மானியங்களும், மேரைகளும் ஒதுக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத் தக்கதாகும்.

## வீடும் தொழிலும்

செங்கற்பட்டு ஆவணங்கள் விளைநிலங்களையும் விளையா நிலங்களையும் அளவிட்டுக் கூறுவது போலவே மக்கள் வாழ்கின்ற வீடுகள் வீட்டைச் சார்ந்த தோட்டங்களையும் அளவிட்டுக் கூறியுள்ளன. ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட கிராமங்கள் ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள வீடுகள், அவற்றில் குடியிருப்பவர் பெயர், இனம் மற்றும் தொழில் ஆகியவற்றுடன் தெளிவாகக் கூறியுள்ளன.

பொதுவாக செங்கற்பட்டு ஆவணங்களில் இந்த வீடுகள் பற்றிய குறிப்புகள் பின்வரும் வரிசையில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

1. காணியாட்சிக்காரர்
2. சுகவாசிகள்

3. பிராமணர்
4. பண்டாரம்
5. கணக்கு
6. இடையர்
7. காவல் தூக்கிரி
8. பள்ளிகள்
9. செட்டிகள்
10. வாணியர்
11. கம்மாளர்
12. வண்ணான்
13. நாவிதன்

இதனைக் கூர்ந்து நோக்கும்பொழுது கிராமத்தின் முதன்மைத் தொழிலாக விளங்கும் விவசாயத்துடன் தொடர்புடைய வீடுகளான காணியாட்சிக்காரர் மற்றும் சுகவாசிகள் வீடுகள் முதலிலும், கோயில் மற்றும் மடங்களுடன் தொடர்புடைய பிராமணர், பண்டாரம் ஆகியோரின் வீடுகள் அடுத்தும், அதைத் தொடர்ந்து கணக்கு, காவல்தூக்கிரி என கிராம நிர்வாகப் பணிகளுடன் தொடர்புடையவர்களின் வீடுகளும் அதன்பிறகு வாணிபம், கைத்தொழில் மற்றும் வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளோரின் வீடுகளும் மற்றும் இறுதியாக கிராமப் பொது ஊழியர்களின் வீடுகளும் என தொழில் மற்றும் சிறப்புரிமைகளின் அடிப்படையில் இவை வகைப்படுத்தப்பட்டிருப்பது தெரியவருகிறது. சேரி வீடுகள் இவற்றையடுத்து தனியே குறிப்பிடப் பெற்றுள்ளன.

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பத்து கிராமங்களில் காணப்படும் பல்வேறு வகை சாதியினர், அவர்கள் வீடுகளின் எண்ணிக்கை, வீடுகளின் அளவு, புழக்கடைகளின் அளவு ஆகியவை அட்டவணை-3ல் பட்டியலிடப் பெற்றுள்ளன. இவற்றின் வாயிலாக எந்தெந்த இடத்தில் எந்தெந்த சாதியினர் அதிகம் காணப்படுகின்றனர். அவர்கள் வீடுகளின் அளவு என்னென்ன போன்றவற்றை அறியலாம்.

பிராமணர், வெள்ளாளர், கணக்கு, செட்டி, கம்மாளர், வண்ணான் ஆகியோர் இந்தப் பத்துக் கிராமங்களிலும் காணப்பட்டனர். காவல், தூக்கிரி, இடையர், வாணியர், தாசிகள், நாவிதன், பணிசேவகர் போன்றோர் ஒன்றிரண்டு கிராமங்கள் தவிர அனைத்துக் கிராமங்களிலும் காணப்பட்டனர். இவர்களைத் தவிர கவரை, கோமுட்டி, இசுலாமியர் கைகோளர், சேணியர், பஞ்சுகொட்டி கல்தச்சர், ரெட்டி, சராப்பு, முத்திரியர், சித்தர், வள்ளுவன், ஒச்சன், வெட்டி, தலையாரி, சாணார், பட்டணவர் எனப் பல்வேறு வகை மக்களும் பரவலாக அனைத்துக் கிராமங்களிலும் இடம் பெற்றிருந்ததைக் காணமுடிகிறது.

உள்ளாவூரில் மிக அதிக அளவில் காணப்பட்ட சாதியினர் பறையர் ஆவர். அக் கிராமத்தில் உள்ள மொத்த வீடுகளுள் 24% பறையர் வீடுகளாக இருந்தன. இவர்களுக்கு அடுத்தபடியாக வெள்ளாளர் 16%, பள்ளிகள் 0.8% கவரைகள் 7.2%

மற்றும் பிராமணர் 6% ஆகவும் இருந்தனர். இக் கிராமத்தில் விவசாயம் முக்கியத் தொழிலாக இருப்பதால் அதனுடன் தொடர்புடைய மக்களான வெள்ளாளர், பள்ளிகள், பறையர் அதிகம் இருந்துள்ளனர் என்பது தெரியவருகிறது.

கல்குளத்தில் வெள்ளாளரே அதிகமாக இருந்தனர். மொத்த வீடுகளுள் 29% வெள்ளாளர் வீடுகளாக இருந்ததைக் காணமுடிகிறது. இவர்களுக்கு அடுத்தபடியாக 25% வீடுகள் பறையர் வீடுகள். பள்ளிகள் மற்றும் பிராமணர் முறையே 11.8%, 8.1% ஆகக் காணப்பட்டனர்.

கோடம்பாக்கத்தில் காணப்பட்ட வீடுகள் 30% கவரைகளின் வீடுகளாகும். இவர்களுக்கு அடுத்தபடியாக 15.4% வெள்ளாளராக இருந்தனர். மற்றும் பள்ளிகள், பறையர், இடையர் ஆகியோர் 13.4%, 10% மற்றும் 8.7% ஆக இருந்ததைக் காணமுடிகிறது. பிராமணர் இங்கு மிகக் குறைவாகவே காணப்பட்டனர். மொத்த வீடுகளுள் இவர்களின் வீடுகள் 2.7% ஆக இருந்தன.

கோவளம் மிகச்சிறந்த வியாபாரத்தலமாக விளங்கியதால் இங்குச் செட்டிகளே அதிகம் காணப்பட்டனர். 23.1% செட்டிகள் வீடுகளாகும். தட்டார், கோமுட்டிகள் ஆகியோர் முறையே 8.4%, 6.8% ஆக இங்கு இருந்தனர். இந்த ஊரில் காணியாட்சி உரிமை பெற்றிருந்த வெள்ளாளர் வீடுகள் குறைவாகவே உள்ளன. இவர்களின் வீடுகள் 3.6% ஆகும். பிராமணரும் இங்கு 5.2% காணப்பட்டனர். மற்றும் பள்ளிகள், கவரைகள், இசுலாமியர் ஆகியோர் முறையே 10.5%, 7.3%, 5.7% ஆக இருந்தனர். இவர்களைத் தவிர மற்ற கிராமங்களில் காணப்படும் மக்களிலிருந்து வேறுபட்ட சில இனத்தவரை இங்குக் காண முடிகிறது. சோனகர், பொந்திலியர் மற்றும் பட்டணவர் ஆகியோர் இவர்களுள் அடங்குவர். இவர்களின் வீடுகள் முறையே 11.6%, 2% மற்றும் 7.8% ஆகக் காணப்பட்டன.

சிங்கப்பெருமாள்கோவிலில் மிக அதிக அளவில் காணப்பட்ட மக்கள் பிராமணராவர். இவர்களது வீடுகள் 25.2% ஆக இருந்ததைக் காணமுடிகிறது. இந்த ஊரில் காணியாட்சி உரிமை பெற்றிருந்தவர்களில் விஷ்ணு பிராமணரும் அடங்குவர். பிராமணருடன் வெள்ளாளரும் காணியாட்சி உரிமை பெற்றிருந்தனர். இவர்களது வீடுகள் 13.7% ஆக இருந்தன. விவசாயம் தவிர நெசவுத்தொழிலும் இங்கு நடந்துவந்ததைக் காட்டும்விதமாக 13.7% கைகோளர் வீடுகளும் காணப்பட்டன. சேணியர் இங்கு 8% ஆக இருந்தனர். ஊரில் பறையர்களே காணப்படாதது குறிப்பிடத்தக்கது.

திருக்கச்சியூரில் அதிகமாகக் காணப்பட்ட மக்கள் பள்ளிகளாக இருந்தனர். 32.3% இவர்களது வீடுகளாகக் காணப்பட்டன. மற்றும் பறையர், வெள்ளாளர் இவர்கள் ஒவ்வொரு இனத்தவரின் வீடுகளும் 7.6% ஆக இருந்தன. இங்கு வசித்த பிராமணரது வீடுகள் 9.5% ஆக இருந்தன. வேட்டைக்காரர் வீடுகள் 5.7% இங்குக் காணப்பட்டன.

திருப்பாசூரில் வெள்ளாளர் வீடுகளே அதிகமாக இருந்தன. 28% வெள்ளாளர் வீடுகளாகும். இவர்களையடுத்து பள்ளிகள் மற்றும் கணக்குப்பிள்ளைகள் வீடுகள்

முறையே 11% மற்றும் 6.9% ஆகக் காணப்பட்டன. சேரி வீடுகள் 14.6% ஆக இருந்தன.

பெருநகரில் அதிகம் காணப்பட்ட மக்கள் வெள்ளாளர் ஆவர். இவர்கள் 35% ஆகக் காணப்பட்டனர். பறையர் மற்றும் பள்ளிகள் முறையே 10.6%, 8.8% ஆக இருந்தனர். பிராமணர் இங்கு 5.6% ஆக இருந்தனர். இங்கும் நெசவுத் தொழில் நடந்து வந்ததைக் காட்டும்விதமாக 8.4% வீடுகள் கைகோளர் வீடுகளாகக் காணப்பட்டன. பொதுவாக, செங்கற்பட்டு கிராமங்கள் முழுவதையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிக அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்த தொழில் நெசவுத் தொழிலாகும். சுமார் 4000க்கும் மேற்பட்ட வீடுகள் இத் தொழிலில் ஈடுபட்டிருந்ததை இந்த ஆவணக் குறிப்புகள் காட்டுகின்றன. இவர்கள் பெரும்பாலும் மதுராந்தகம், காஞ்சிபுரம் தாலுக்காக்களில் காணப்பட்டனர். பெருநகர், சின்னக் காஞ்சிபுரம் சீமையில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

மாங்காட்டில் மிக அதிகபட்சமாக 33% பறையர்கள் காணப்பட்டனர். வெள்ளாளர், பிராமணர், இசுலாமியர், பணிசேவர், செட்டிகள் ஆகியோர் முறையே 5.7%, 3%, 4.4%, 4.4%, 3% ஆகக் காணப்பட்டனர்.

ஸ்ரீபெரும்புதூரில் அதிகமாகக் காணப்பட்ட மக்கள் பிராமணராக இருந்தனர். இவர்களது வீடுகள் 25% ஆகக் காணப்பட்டது. இவர்களையடுத்தபடியாக பறையர் 2.35% ஆகக் காணப்பட்டனர். வெள்ளாளர் 10% ஆகவும் பள்ளிகள் 6.7% ஆகவும் காணப்பட்டனர். மேலும் மற்ற கிராமங்களில் காணப்படுவதுபோல் பிறவகை மக்களுடன் இங்கு வெற்றிலைத் தோட்டக்காரர் வீடுகளும் அமைந்திருந்தன. இவர்களின் வீடுகள் 3.6% ஆக இருந்தது. சிங்கப்பெருமாள் கோவிலைப் போலவே இவ்வூரிலும் சேணியர்கள் காணப்பட்டனர்.

இதுவரை கூறப்பட்டவை தவிர பரவலாக அனைத்துக் கிராமங்களிலும் காவல் தூக்கிரி, கிராம இன்றியாமையாப் பணியாளர் மற்றும் கம்மாளர்கள் போன்றோர்களும் காணப்பட்டனர்.

மேற்கூறியவற்றைக் கூர்ந்து நோக்கும்பொழுது ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படும் சாதியாளரின் எண்ணிக்கை அந்தந்த கிராமங்களில் முக்கியமாக விளங்கும் தொழில் அடிப்படையில் அமைந்திருந்ததைக் காணமுடிகிறது. பொதுவாக கோவளம் தவிர மற்ற கிராமங்களில் விவசாயம் முதன்மைத் தொழிலாக இருப்பதால் அக்கிராமங்களில் விவசாயத்துடன் தொடர்புடைய வெள்ளாளர், பள்ளிகள் மற்றும் பறையர் ஆகியோர் அதிகம் காணப்பட்டனர். அதுபோலவே கோவளம் சிறந்த துறைமுகமாகவும் வாணிபத் தலமாகவும் விளங்கியதால் வாணிபத்துடன் தொடர்புடைய செட்டிகள் அதிகம் காணப்பட்டனர். மேலும் வாணிபத் தொடர்புடைய பலதரப்பட்ட மக்களையும் காணமுடிகிறது. இங்கு இசுலாமியர், சோனகர் ஆகியோருடன் பொந்திலியரும் காணப்பட்டனர். மேலும் கோவளத்தில் பாதிரிகோவில் ஒன்றும் அதைச்சேர்ந்த நிலமாக 25 காணி நிலப்பரப்பும் காணப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்த இடத்தில்

*20 குடிசைகள் 2 காணி நிலப்பரப்பில் அமைந்திருந்ததும் இந்த ஆவணங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. ஆக வேற்று நாட்டினரும், மதத்தினரும் இங்குக் குடியிருந்தது தெரியவருகிறது.*

*இதுவரை குறிப்பிடப் பெற்றவை ஒவ்வொரு கிராமத்திலும் முக்கியமாகக் காணப்பட்ட சாதியாளரைப் பற்றியதாகும். ஒட்டுமொத்தமாக இந்த 10 கிராமங்களையும் எடுத்துக் கொள்வோமாயின் அதிகமாக காணப்படும் சாதியினர் வெள்ளாளர் 16.5% ஆக இருப்பது தெரியவருகிறது இவர்களுக்கு அடுத்தப்படியாக பறையர் 12% ஆக இருந்தனர். இவர்களில் பெரும்பான்மையும் வெள்ளாளர் மற்றும் காணியாட்சி பெற்றிருந்தவர்களின்கீழ் வேலைசெய்த பண்ணையாட்களாக இருந்தனர். இவர்களுக்கு அடுத்தப்படியாக அதிகப்படியாக, காணப்பட்ட மக்கள் பிராமணராவர் இவர்கள் 9.9% ஆகக் காணப்பட்டனர். கோயில், வேதம் ஓதுவித்தல் மற்றும் மடங்கள் போன்ற சமயப் பணிகளோடு தொடர்புடையவராதலால் இவர்கள் அனைத்துக் கிராமங்களிலும் இடம்பெற்றிருந்தனர் எனலாம். இவர்களையடுத்து பள்ளிகள் 9.7% ஆகக் காணப்பட்டனர். இவர்களும் பெரும்பான்மை படியாட்களாக இருந்ததைக் காணமுடிகிறது. சில ஊர்களில் பள்ளிகளும் காணியாட்சி உரிமை பெற்றிருந்தனர். காட்டாக, ஸ்ரீபெரும்புதூரில் காணியாட்சி உரிமை பெற்றவர்களுள் பள்ளிகளும் அடங்குவர். இவர்கள் தவிர இடையர், கவரைகள், செட்டிகள், சேணியர், கைகோளர், கோமுட்டி, கம்மவார் போன்றோர் முறையே 3.4%, 4%, 5.2%, 0.7%, 2.1%, 1.3%, 0.2% ஆக இருந்தனர்.*

*மேலும் நிர்வாகத்துடன் தொடர்புடைய கணக்கு, காவல் தூக்கிரி போன்றோர் முறையே 2.9% மற்றும் 1% இருந்தனர். பணிசேவன், வண்ணான், நாவிதன், வெட்டி, தலையார் போன்றோர் முறையே 1.3%, 1.2%, 1.13%, ஆக இருந்ததைக் காணமுடிகிறது. மேலும் சராப்பும், தட்டார், தச்சர் கருமார், ஓச்சர், குயவர், முத்திரியர், ரெட்டி, பஞ்சுகொட்டி, சித்தர், வள்ளுவர், சாணார் போன்றோர் சராசரியாக 1% ஆகக் காணப்பட்டனர்.*

## *காணியாட்சி*

*ஆய்வுக்கான பத்து ஊர்களில் திருக்கச்சியூர், சிங்கப்பெருமாள் கோவில் நீங்கலாக மற்ற அனைத்து ஊர்களிலும் காணியாட்சி உரிமை பெற்றிருந்தவர்கள் வெள்ளாளர்கள் ஆவர். திருக்கச்சியூரிலும், சிங்கப்பெருமாள் கோவிலிலும் முறையே சிவப் பிராமணரும், விஷ்ணு பிராமணரும் காணியாட்சி உரிமை பெற்றிருந்தனர். ஸ்ரீபெரும்புதூரில் பள்ளிகளும் காணியாட்சி உரிமை பெற்றிருந்தனர். அவற்றின் விவரம் வருமாறு.*

| ஊர் | காணியாட்சி உரிமை பெற்றிருந்தோர் |
|---|---|
| உள்ளாவூர் | கொண்டைக்கட்டி வெள்ளாளர்<br>சவள வெள்ளாளர்<br>கம்மவார்<br>பாளையக்காரர் |
| கல்குளம் | கொண்டைக்கட்டி வெள்ளாளர்<br>பரிசை வெள்ளாளர் |
| கோவளம் | கொண்டைக்கட்டி வெள்ளாளர்<br>துளுவ வெள்ளாளர் |
| சிங்கப்பெருமாள் கோவில் | விஷ்ணு பிராமணர்<br>நல்வெள்ளாளர் |
| திருக்கச்சியூர் | சிவப்பிராமணர் |
| திருப்பாசூர் | மடவளாகம் மடம் |
| பெருநகர் | கொண்டைக்கட்டி வெள்ளாளர்<br>துளுவ வெள்ளாளர் |
| மாங்காடு | கொண்டைக்கட்டி வெள்ளாளர்<br>நல் வெள்ளாளர் |
| ஸ்ரீபெரும்புதூர் | துளுவ வெள்ளாளர்<br>பள்ளிகள் |

## தொழில்

தொழில் அடிப்படையில் இக்கிராமங்களில் காணப்படும் மக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. விவசாயம் மற்றும் கால்நடை பராமரிப்பு தொடர்புடையோர்
2. கைத்தொழில் மற்றும் பிறதொழில் செய்வோர்
3. வணிகர்
4. கிராம இன்றியமையாப் பணியாளர்
5. கல்விச் சாலை, கலாச்சாரம் ஆகியவற்றோடு தொடர்புடையோர்
6. நிர்வாகத்தினர்
7. காவல் மற்றும் தூக்கிரி

### 1) விவசாயம் மற்றும் கால்நடை பராமரிப்பு

- வெள்ளாளர்
- பள்ளிகள்
- பறையர்
- ரெட்டிகள்
- கம்மவார்
- இடையர்
- சாணார்

ஆகியோர் இவற்றில் அடங்குவர்.

### 2) கைத்தொழில் மற்றும் கிராமியத் தொழில்புரிவோர்

- கைக்கோளர்
- பஞ்சுகொட்டி
- தச்சர்
- கருமார்
- கம்மாளர்
- தட்டார்
- கன்னார்
- வாணியர்
- குயவர்
- வேட்டைக்காரர்
- பட்டிணவர்
- கல்தச்சர்

### 3) வணிகர்

- செட்டிகள்
- பிற வணிகர்
- சராப்புகள்

### 4) கிரா இன்றியமையாப் பணியாளர்கள்

- நாவிதர்
- வண்ணார்
- குடிமிகள்

### *5) சமயம், கல்வி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றோடு தொடர்புடையவர்*

- பிராமணர்
- பண்டாரங்கள்
- தேவதாசிகள்
- வள்ளுவர்
- ஒச்சர்
- நாகசரம்
- நட்டுவர், கூத்தாடிகள்

### *6) நிர்வாகத்தினர்*

- கணக்கு
- பணிசேவர்
- தலையாரிகள்
- காவல் மற்றும் தூக்கிரி
- முகமதியர்
- பக்கிரி
- முத்திரியர்

### வீடுகளின் அமைப்பு

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கிராமங்களில் காணப்படும் வீடுகள் பொதுவாக மனை, புழக்கடை, புறப்புழக்கடை, தோட்டம், தொழுவம், ஆகியவற்றுடன் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. சேரி வீடுகள் உட்பட அனைத்து வீடுகளும் புழக்கடைகளுடன் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக வீடுகளைவிட தோட்டங்களும், புழக்கடைகளும் பெரியதாகவே காணப்பட்டன. கல்குளம் எனும் ஊரில் வாணியர் வீட்டுத் தோட்டத்தில் 'செக்கடி' காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக காணியாட்சி பெற்றவர்களின் வீடுகள் பெரியனவாக காணப்படுவதை இந்த ஆவணங்கள் வாயிலாக அறியலாம். இந்தப் பத்து ஊர்களில் வெள்ளாளர்களே பெரும்பான்மை காணியாட்சி பெற்றிருந்தமையால் அவர்களின் வீடுகள் மற்ற வீடுகளைக் காட்டிலும் பெரியனவாகக் காணப்பட்டன. இவர்கட்கடுத்தபடி கணக்கப்பிள்ளைகள் மற்றும் பிராமணர் வீடுகள் பெரிய வீடுகளாக காணப்படுவதைக் காணலாம். மேலும் உள்ளாவூர், கல்குளம் போன்ற ஊர்களில் வீடுகளின் அளவு மற்ற பெரிய வீடுகளுடன் ஒப்பிடத்தக்கதாகவே இருப்பதையும் காணலாம்.

இந்த வீடுகள் அனைத்தும் முறையாக அவரவர்க்குரிய தெருக்களில் அமைந்திருந்ததைச் சுட்டும் விதமாக பிராமண வாஸ்துத் தெரு, மேலத்தெரு, கணக்குத் தெரு, கம்மாளார் தெரு, செட்டித் தரு எனப்பலவித தெருக்கள் காணப்பட்டதை இந்த ஆவணங்கள் காட்டுகின்றன. இவற்றைப் பின்னிணைப்பில் காணலாம்.

## அட்டவணை 3 - வீடுகள்

| எண் | வீடுகள் | உள்ளாவூர் | | | கல்குளம் | | | கோடம்பாக்கம் | | | கோவளம் | | | சிங்கபெருமாள் கோவில் | | | திருக்கச்சியூர் | | | திருப்பாசூர் | | | பெருநகர் | | | மாங்காடு | | | ஸ்ரீபெரும்புதூர் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. |
| 1. | பிராமணர் | 5 | 60 | 160 | 9 | 59 1/4 | 174 1/2 | 4 | 28 | 47 | 10 | 55 | 193 | 22 | 96 | 117 | 10 | 51 13/16 | 207 9/16 | 9 | 41 1/6 | 143 5/6 | 16 | 54 1/2 | 101 5/6 | 7 | 8 | 32 | 75 | 487 3/8 | 552 1/2 |
| 2. | வெள்ளாளர் | 14 | 195 | 585 | 32 | 408 1/2 | 804 1/4 | 23 | 304 | 1202 | 6 | 71 | 252 | 12 | 120 | 290 1/4 | 8 | 19 3/8 | 36 | 41 | 136 5/6 | 221 11/16 | 98 | 38 45/16 | 931 | 13 | 43 | 250 | 30 | 215 3/6 | 591 7/8 |
| 3. | பண்டாரம் | 2 | 12 | 25 | 2 | 9 | 54 3/4 | 2 | 20 | 82 | 1 | 5 | 45 | 1 | 2 | 10 | 1 | 1 7/8 | 3 3/4 | 2 | 3 1/4 | 3 | 7 | 20 1/2 | 26 | | | | | | |
| 4. | கணக்கு | 2 | 30 | 190 | 3 | 80 1/4 | 38 1/2 | 5 | 45 | 425 | 5 | 190 | 314 1/2 | 2 | 10 | 19 | 5 | 37 1/4 | 169 | 10 | 23 1/2 | 103 1/5 | 7 | 21 2/6 | 28 3/8 | 1 | 5 | 2 | 10 | 104 | 550 3/8 |
| 5. | கம்மவார் | 2 | 35 | 115 | | | | | | | 1 | 8 3/4 | 25 | | | | | | | | | | | | | | | | | | |
| 6. | இடையர் | 3 | 30 | 30 | | | | 13 | 57 | 75 | 5 | 30 | 72 | 1 | 2 | 6 | 8 | 23 3/6 | 38 1/4 | 4 | 9 | 9 3/8 | 10 | 31 1/2 | 6 1/2 | 2 | 2 | 5 | 13 | 52 1/8 | 133 |
| 7. | காவல் தூக்கிரி | 5 | 42 | 328 | | | | 5 | 55 | 344 | | | | | | | 1 | 11 14 | 61 | 4 | 10 1/2 | 51 3/4 | 4 | 15 1/2 | 42 3/4 | 42 3/4 | 1 | 1/2 | 15 | | |
| 8. | பள்ளிகள் | 9 | 60 | 215 | 13 | 60 1/2 | 95 | 15 | 53 | 104 | 20 | 101 | 196 | 12 | 44 1/4 | 89 1/2 | 34 | 111 3/8 | 365 | 16 | 37 1/4 | 60 5/8 | 25 | 16 | 29 3/8 | 62 7/16 | | | 20 | 99 3/8 | 233 3/4 |
| 9. | கவரை | | | | | | | 45 | 233 | 285 | 14 | 149 | 127 | | | | | | | 3 | 11 1/2 | 29 | 6 | 12 | 32 3/4 | 12 3/6 | | | | | |
| 10. | கைகோளர் | | | | | | | | | | | | | 12 | 37 | 79 | | | | | | | 24 | 65 | 59 3/18 | | | | | | |
| 11. | கோமுட்டி` | | | | | | | | | | 13 | 84 | 68 | 1 | 3 | 9 | | | | 1 | 2 1/4 | 3 1/8 | 2 | 7 1/16 | 11 7/5 | | | | 5 | 60 | 164 |
| 12. | செட்டி | 2 | 20 | 55 | 3 | 11 1/4 | 31 | 1 | 6 | 8 | 44 | 321 1/2 | 420 1/2 | 3 | 13 | 21 | 4 | 13 | 23 7/8 | 4 | 11 1/18 | 17 11/18 | 6 | 2 1/2 | 29 7/8 | 7 | 6 | 20 | 14 | 149 1/8 | 249 |
| 13. | வாணியர் | 1 | 10 | 15 | 7 | 23 | 47 1/2 | | | | 1 | 8 | 42 | 1 | 5 | 15 | 2 | 6 | 13 1/2 | | | | 2 | 4 3/4 | 8 | | | | 4 | 50 | 160 |
| 14. | சேணியர் | | | | | | | | | | | | | 7 | 21 | 68 | | | | | | | | | | | | | 5 | 47 | 64 |
| 15. | கம்மாளர் | 3 | 30 | 240 | | | | | | | | | | | | | 7 | 33 | 156 | 6 | 13 29/32 | 39 3/32 | | | | 4 | 6 1/2 | 7 3/4 | 7 | 65 | 101 |

## அட்டவணை 3 - வீடுகள் (தொடர்ச்சி)

| எண் | வீடுகள் | உள்ளாவூர் | | | கல்குளம் | | | கோடம்பாக்கம் | | | கோவளம் | | | சிங்கபெருமாள் கோவில் | | | திருக்கச்சியூர் | | | திருப்பாசூர் | | | பெருநகர் | | | மாங்காடு | | | ஸ்ரீபெரும்புதூர் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. |
| 16. | தச்சன் கருமான் | | | | 3 | 12 | 31 1/2 | 2 | 16 | 80 | 5 | 23 | 63 | 3 | 9 | 14 | | | | | | | 4 | 13 3/4 | 18 5/16 | | | | | | |
| 17. | கல் தச்சன் | | | | | | | | | | 1 | 6 | 10 | | | | | | | | | | | | | | | | | | |
| 18. | தட்டார் | | | | | 1 | 3 | 24 1/2 | | | | 17 | 94 | 212 | 3 | 12 | 28 | | | | | | | | | | | | | | |
| 19. | சராப்பு | | | 2 | 7 | 28 | 3 | 12 | 28 | | | | | | | | | | | | | | 1 | 15 | 17 3/15 | | | | | | |
| 20. | கன்னான் | | | | | | | | | | 1 | 3 | 7 | | | | | | | | | | | | | | | | | | |
| 21. | பட்டணவர் | | | | | | | | | | 15 | 30 | | | | | | | | | | | | | | | | | | | |
| 22. | செம்படவர | | | | | | | | | | | | | | | | | | | | | | 1 | 1/2 | 30 | | | | 3 | 20 | 30 |
| 23. | பணிசேவன் | 1 | 10 | 15 | 3 | 52 3/4 | 35 1/2 | 1 | 4 | 40 | | | | | | | 1 | | | 2 | 2 1/4 | 13 | 3 | 11 15/16 | 28 1/2 | 10 | 14 1/2 | 44 | 1 | 10 | 20 3/8 |
| 24. | வண்ணான் | 1 | 10 | 15 | 1 | 1 1/2 | 15 | 2 | 4 | 10 | 4 | 14 | 75 | 1 | 2 | 1/2 | 1 | 3 | 8 | 1 | 2 1/2 | 4 1/2 | 3 | 2 1/4 | 9 1/2 | 1 | 1/2 | 5 | 5 | 22 | 56 |
| 25. | நாவிதன் | 1 | 10 | 15 | 2 | 31 1/4 | 17 1/2 | 2 | 6 | 43 | 2 | 8 | 132 | | | | 3 | 9 | 27 | 1 | 7 | 39 | 5 | 18 | 39 | 1 | 2 | 18 | 1 | 10 | 40 |
| 26. | வெற்றிலை தோட்டக்காரர் | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 11 | 62 | 115 |
| 27. | பஞ்சு கொட்டி | 1 | 10 | 15 | 1 | 3 | 9 | | | | | | | 1 | 5 | 9 | | | | | | | 1 | 3 | | | | | | | |
| 28. | ரெட்டி | | | | 1 | 5 3/4 | 7 1/2 | | | | 2 | 7 | 80 | | | | | | | | | | | | | | | | | | |
| 29. | முத்திரையர் | | | | 3 | 15 1/4 | 56 2/4 | | | | 2 | 10 | 24 | | | | | | | | | | | | | | | | | | |
| 30. | ஏனாதி | | | | | | | | | | | | | | | | | | | 1 | 3 3/5 | 10 1/6 | | | | | | | | | |
| 31. | சித்தர் | | | | 2 | 6 3/4 | - | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

## அட்டவணை 3 - வீடுகள் (தொடர்ச்சி)

| எண் | வீடுகள் | உள்ளாவூர் | | | கல்குளம் | | | கோடம்பாக்கம் | | | கோவளம் | | | சிங்கபெருமாள் கோவில் | | | திருக்கச்சியூர் | | | திருப்பாசூர் | | | பெருநகர் | | | மாங்காடு | | | ஸ்ரீபெரும்புதூர் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. | எ | வி.அ. | பு.அ. |
| 32. | வள்ளுவன் | 1 | 16 | - | 1 | 8 | 80 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 33. | வெட்டியார் | | | | 2 | 8 | 60 | 2 | 10 | 75 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 34. | தலையாரி | | | | | | | | | | 2 | 8 | 238 | | | | | | | | | | | | | | | | 5 | 85 1/6 | 448 |
| 35. | தாசிகள் | | | | | | | 4 | 28 | 32 | 1 | 4 | 12 | 3 | 14 | 21 | 2 | 9 1/2 | 8 3/4 | 5 | 14 1/16 | 23 1/2 | 9 | 27 3/8 | 26 7/8 | 4 | 6 1/7 | 7 | | | |
| 36. | நாகசுரம் | | | | | | | | | | | | | 1 | 6 | 8 | | | | | | | | | | | | | | | |
| 37. | டமாரம் நட்டுவர் | | | | | | | | | | | | 1 | 1 1/2 | 2 | | | | | | | | | | | | | | 4 | 35 | 85 |
| 38. | வேட்டைக்காரர் | | | | | | | | | | | | | | | | 6 | 12 | 52 | | | | | | | | | | | | |
| 39. | பொந்திலியர் | | | | | | | | | | | 4 | 21 | 35 | | | | | | 3 | 5 21/32 | 7 7/8 | | | | 10 | 16 1/2 | 84 1/2 | | | |
| 40. | துலுக்கர் | | | | | | | 2 | 5 | 10 | 11 | 326 | 488 | | | | | | | | | | | | | | | | | | |
| 41. | சோனகர் | | | | | | | | | | 21 | 42 | | | | | 1 | 4 1/2 | 3 | | | | | | | | | | | | |
| 42. | ஒச்சன் | 1 | 2 | 10 | | | | 1 | 4 | 26 | 1 | | 110 | | | | 1 | 4 1/2 | 3 | | | | | | | | | | | | |
| 43. | குயவன் | 1 | - | - | | | | | | | | | | | | | 1 | 6 | 18 | | | | 1 | 9 | 9 | 3 | 4 | 1 | 2 | 15 | 30 |
| 44. | சாணார் | | | | | | | 1 | 2 | 6 | 5 | 16 | 42 | | | | | | | | | | 1 | | | | | | 10 | 45 | 150 |
| 45. | குடுமி | | | | | | | | | | | | | | | | | | | | | | 4 | 12 | 6 | | | | | | |

## அட்டவணை 3 - வீடுகள் (தொடர்ச்சி)

| எண் | வீடுகள் | உள்ளாவூர் | | | கல்குளம் | | | கோடம்பாக்கம் | | | கோவளம் | | | சிங்கபெருமாள் கோவில் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எ | வீ.அ. | பு.அ. | எ | வீ.அ. | பு.அ. | எ | வீ.அ. | பு.அ. | எ | வீ.அ. | பு.அ. | எ | வீ.அ. | பு.அ. |
| 46. | சில்லரை சாதி | | | | | | | | | | | | | | | |
| 47. | சேரி | 20 | 100 | 500 | 28 | 58 | 244 | 20 | 125 | 415 | | | | | | |
| | கிராமநத்தம் | 63 | 742 | 2558 | 82 | 633 3/4 | 1586 1/4 | 128 | 801 | 2849 | 190 | 800 | 2082 3/8 | 87 | 375 3/4 | 784 1/4 |
| | சேரிநத்தம் | 20 | 100 | 500 | 25 | 58 | 244 | 2 | 135 | 490 | | | | | | |

| எண் | வீடுகள் | திருக்கச்சியூர் | | | திருப்பாசூர் | | | பெருநகர் | | | மாங்காடு | | | ஸ்ரீபெரும்புதூர் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எ | வீ.அ. | பு.அ. | எ | வீ.அ. | பு.அ. | எ | வீ.அ. | பு.அ. | எ | வீ.அ. | பு.அ. | எ | வீ.அ. | பு.அ. |
| 46. | சில்லரை சாதி | | | | | | | | | | 82 | 117 5/8 | 406 1/4 | 52 | 178 1/6 | 252 |
| 47. | சேரி | 8 | 600 | | 21 | 150 | | 31 | 104 1/2 | 730 1/2 | 75 | 1525 | | 42 | 225 | 1025 |
| | கிராமநத்தம் | 97 | 369 3/16 | 1575 9/16 | 122 | 351 5/6 | 751 1/4 | 241 | 835 3/16 | 1900 | 152 | 1900 | - | 122 | 351 3/8 | 75 1/4 |
| | சேரிநத்தம் | 8 | 600 | | 21 | 150 | | 31 | 104 1/2 | 730 1/2 | 75 | 1525 | | 42 | 225 | 1025 |

எ - எண்ணிக்கை

வீ. அ. - வீட்டின் அளவு (குழி)

பு. அ. - புழக்கடை அளவு

## வருவாய்

செங்கற்பட்டு ஆவணங்கள் வருவாய் பற்றிய செய்திகளைத் தீர்வை வகைஏடு, பேரிசு வகை ஏடு ஆகியவற்றின்கீழ்த் தருகின்றன என்பதை, ஏடுகளின் வகைகள் பற்றிக் கூறும் பொழுதே கண்டோம். அவற்றில் தீர்வை வகை ஏடுகளில், மொத்த விளைச்சலிலிருந்து மானியங்களை நீக்கி தீர்வை கணக்கிடப்பெறும் முறை மிக விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றைப் பின்னிணைப்பில் காணலாம். பேரிசு வகை ஏடுகளில் கணக்கிடப்பட்ட வருவாய் மட்டும் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவ்விரு ஏடுகளும் 1762 முதல் 1766 வரையுள்ள 5 வருடங்களுக்கான வருவாய்க் கணக்குகளைக் காட்டுகின்றன. ஆய்வுக்கான பத்து ஊர்களில் கீழ்க்காணும் 5 ஊர்களின் ஆவணங்களே வருவாய் பற்றிய விவரங்களைக் கொண்டு விளங்குகின்றன.

- உள்ளாவூர்
- சிங்கப்பெருமாள் கோவில்
- திருக்கச்சியூர்
- மாங்காடு
- கோவளம்

இவற்றில் மாங்காடு ஆவணத்தில் 1762 ஆம் வருடக் கணக்கை மட்டுமே காண முடிகிறது. இந்த ஐந்து ஊர்களுள் வருவாய்க் கணக்குகள் தனித்தனியே பின்வரும் அட்டவணைகளில் பட்டியலிடப்பெற்றுள்ளன.

ஒவ்வொரு கிராமத்திலும் தானியமாக எவ்வளவு வருவாய் கிடைக்கிறது என்பது அவற்றின் விலைமதிப்பும் குறிப்பிடப் பெற்றுள்ளது. இவற்றுடன் ரொக்கமாக கிடைக்கப்பெறும் வருவாய் சேர்க்கப்பட்டு மொத்த வருவாய் கணக்கிடப்படுகிறது. தானிய ஆதாயம், ரொக்க ஆதாயம் இவை தவிர 'தப்ரீக்' எனப்படும் குடிக்கடனும் வசூலிக்கப்படுவதை இந்த ஆவணங்கள் சுட்டுகின்றன. திருக்கச்சியூர் மற்றும் உள்ளாவூர் ஆகியவற்றில் இவற்றைக் காணலாம்.

ஒவ்வொரு கிராமத்திலிருந்து எந்தெந்த தானியம் எந்த அளவு வருவாயாக வசூலிக்கப்பட்டது என்பதையும் அதற்கு இணையாக விலை மதிப்பையும், ரொக்கமாக கிடைக்கக்கூடிய வருவாய் எவற்றிலிருந்து, எவ்வளவு கிடைக்கின்றது போன்றவற்றையும் இவ்வட்டவணையில் காணலாம்.

## தானிய ஆதாயம்

நெல், வரகு, சோளம், கேழ்வரகு, கம்பு, தினை, சாமை, பயறு, உளுந்து, எள்ளு, கொள்ளு, துவரை, காராமணி ஆகியவை தானியமாகப் பெறப்பட்ட வருவாயில் அடங்குவன. மொத்த வருவாயில் தானியமாகக் கிடைக்கப்பெற்ற வருவாய் இந்த 4 கிராமங்களிலும் சேர்ந்து சராசரியாக 90 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருந்ததைக் காணமுடிகிறது. அவற்றிலும் நெல்லின் வாயிலாக கிடைக்கப்பெற்ற

*வருவாயே மிகவும் அதிகமானதாகும். இது மொத்த தானிய ஆதாயத்தில் 80 சதவிகிதமாகக் காணப்பட்டது.*

*1762 முதல் 1766 வரையிலான 5 வருடங்களில் நெல்லின் சராசரி விலை 1 வராகனுக்கு 3.6 கலம் என்ற அளவிலும் வரகு, கேழ்வரகு, கம்பு, சோளம், தினை, சாமை, பயறு, உளுந்து, துவரை, காராமணி, எள்ளு, கொள்ளு ஆகியவற்றின் விலைகள் முறையே 4.2, 2.6, 3.3, 2.5, 2.1, 3.6, 3.2, 3.1, 2.4, 1.4, 1.3, 1.4, 2 கலம் என்ற அளவிலும் காணப்பட்டன. 1763 ஆம் வருடம் இங்கே காட்டப்பட்டுள்ள இந்த நான்கு கிராமங்களில் நெல், வரகு, கேழ்வரகு ஆகியவற்றின் விலை சற்று உயர்ந்திருப்பதைக் காணமுடிகிறது. இவற்றை அட்டவணையில் காணலாம். அதுபோலவே நெல் மற்றும் தானியங்களின் விலை ஊருக்கு ஊர் சற்று மாறுபட்டிருப்பதையும் காணமுடிகிறது. காட்டாக இந்த 5 வருடங்களில் நெல்லின் சராசரி விலை உள்ளாவூரில் வராகனுக்கு 3.9 கலமாகவும்,*

*திருக்கச்சியூரில் 3.6 கலமாகவும் சிங்கப்பெருமாள் கோவிலில் 3.4 கலமாகவும் காணப்பட்டது. மேலும் திருக்கச்சியூர், சிங்கப்பெருமாள்கோவில் மற்றும் உள்ளாவூரில் நெல் உட்பட மொத்த தானியங்களில் சராசரி விலைமதிப்பு முறையே 3.3, 3.5, 3.8, ஆகக் காணப்பட்டது. இவற்றின் சராசரி மதிப்பு வராகனுக்கு 3.5 கலம் என்றவாறு காணக்கிடப்படுகிறது.*

அட்டவணை 5.அ வருவாய் - உள்ளாவூர்

| தானியம் | 1762 | | 1763 | | 1764 | | 1765 | | 1766 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | க-ம-ப | வ-ப-கா | க-ம-ப | வ-ப-கா | க-ம-ப | வ-ப-கா | க-ம-ப | வ-ப-கா | க-ம-ப | வ-ப-கா |
| நெல் | 2127-5-0 | 531-3-50 | 3010-5-1 | 1136-32-0 | 3970-0-7 | 915-20-20 | 3373-2-3 | 760-12-40 | 3304-8-4 | 833-12-55 |
| வரகு | 10-5-5 | 2-19-55 | 0121-08-05 | 40-30-40 | 93 — 5 — 3 | 18-24-60 | 37-4-0 | 8-16-0 | | |
| கேழ்வரகு | 212-11-5 | 85-25-20 | 29 — 9 — 6 | 16 — 1 -55 | 47 — 7 — 6 | 16 -12 — 55 | 23 — 3 4 | 8 -28 -0 | 69 — 3 — 3 | 21 — 31 - 40 |
| கொள்ளு | 0-5-7 | 0 — 8 - 55 | | | | | | | | |
| எள்ளு | 36-0-5 | 22 — 27 - 70 | | | | | | | | |
| கம்பு | | | 3-11-12 | 1-15-35 | | | | | | |
| திணை | 0-6-6 | 0-5-50 | 2-5-3 | 0-32-5 | | | | | | |
| சாமை | | | 6-3-2 | 2-3-30 | 22-10-5 | 13-27-15 | 10-0-3 | 2-18-20 | 0-4-7 | 0-3-30 |
| துவரை | | | 1-1-0 | 0-31-40 | 10-0-0 | 0-12-15 | | | | |
| உளுந்து | | | 0 — 0 — 2 | 0 — 0 - 25 | | | | | | |
| சோளம் | | | | | 0-4-3 | 0-10-55 | | | | |
| கூடுதல் | 2387-7-4 | 642-18-60 | 3175-8-6 | 1199-5-70 | 4144-5-0 | 964-35-60 | 3443-10-2 | 780-2-70 | 3393-3-2 | 859-3-35 |

க- கலம்; ம- மரக்கால்; ப- படி; வ — வராகன்; ப- பணம்; கா- காசு

அட்டவணை 5.அ வருவாய் - உள்ளாவூர்

| ரொக்காதாயம் | 1762 | 1763 | 1764 | 1765 | 1766 |
|---|---|---|---|---|---|
| | வ-ப-கா | வ-ப-கா | வ-ப-கா | வ-ப-கா | வ-ப-கா |
| பிழக்கடை விகிதம் | 2-9-0 | 2-9-0 | 2-9-0 | 2-9-0 | 2-9-0 |
| தூக்கிரி விகிதம் | 2-24-0 | 2-24-0 | 2-23-70 | 2-23-70 | 2-24-0 |
| வெற்றிலைத் தோட்டம் | 0-11-20 | 0-22-55 | | | 0-16-0 |
| கணக்கு | | | 7-18-65 | | 2-9-0 |
| கூடுதல் | 5-8-20 | 5-19-55 | 12-15-65 | 4-32-70 | 5-13-0 |
| தப்ரீக் | 211-13-40 | 199-14-75 | 105-16-70 | 90 -09-20 | 199-10-45 |
| மொத்த வருவாய் | 859-4-40 | 1404-4-40 | 1082-32-25 | 875-9-0 | 1055-27-0 |

வ — வராகன்; ப- பணம்; கா- காசு

அட்டவணை 5.ஆ வருவாய், சிங்கப்பெருமாள் கோவில்

| தானியம் ஆதாயம் | 1762 | 1763 | 1764 | 1765 | 1766 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | க-ம-ப | வ-ப-கா | க-ம-ப | வ-ப-கா | க-ம-ப | வ-ப-கா | க-ம-ப | வ-ப-கா | க-ம-ப | வ-ப-கா |
| நெல் | 52-8-5 | 15-2-20 | 19-8-5 | 9-3-30 | 27-2-4 | 7-28-10 | 75-6-6 | 17-6-6 | 56-7-6 | 14-5-50 |
| வரகு | 2-11-1 | 0-26-35 | 13-10-3 | 4-9-45 | 17-3-5 | 4-2-45 | 6-9-0 | 1-6-15 | 23-1-4 | 4-22-40 |
| கேழ்வரகு | 4-6-7 | 2-10-10 | 6-6-5 | 3-10-10 | 6-10-0 | 3-14-70 | 11-1-6 | 3-25-70 | 9-3-2 | 3-3-30 |
| கொள்ளு | | | | | 0-1-4 | | | | | 01-1-55 |
| எள்ளு | | | | | 0-1-2 | | | | | |
| கூடுதல் | 60-2-5 | 18-2-65 | 40-1-5 | 16-23-5 | 51-6-7 | 15-16-45 | 93-5-4 | 22-11-65 | 89-1-2 | 21-33-15 |

அட்டவணை 5.ஆ வருவாய், சிங்கப்பெருமாள் கோவில்

| ரொக்காதாயம் | 1762 | 1763 | 1764 | 1765 | 1766 |
|---|---|---|---|---|---|
| | வ-ப-கா | வ-ப-கா | வ-ப-கா | வ-ப-கா | வ-ப-கா |
| செட்டி மாதவரி | 0-7-60 | 0-7-60 | 0-7-60 | 0-7-60 | 0-7-60 |
| பஞ்சுகொட்டி | 0-7-60 | 0-7-60 | 0-7-60 | 0-7-60 | 0-7-60 |
| கூடுதல் | 0-15-40 | 0-15-40 | 0-15-40 | 0-15-40 | 0-15-40 |
| மொத்தவருவாய் | 18-18-25 | 17-2-45 | 15-32-5 | 22-27-25 | 22-12-55 |

க- கலம்; ம- மரக்கால்; ப- படி; வ — வராகன்; ப- பணம்; கா- காசு

அட்டவணை 5.ஆ வருவாய், சிங்கப்பெருமாள் கோவில்

| வருவாய் | 1762 | 1763 | 1764 | 1765 | 1766 |
|---|---|---|---|---|---|
| | வ-ப-கா | வ-ப-கா | வ-ப-கா | வ-ப-கா | வ-ப-கா |
| தீர்வை வரவு | 108-5-50 | 175-34-70 | 75-13-40 | 50-11-20 | 46-12-75 |
| தீர்வை போக்கு | 39-28-55 | 28-16-25 | 25-10-10 | 10-30-30 | 10-2-20 |
| வெளிவரவு | 78-9-45 | 53-5-5 | 151-22-40 | 46-11-20 | 49-20-65 |
| வெளி போக்கு | 62-22-40 | 23-30-30 | 99-22-40 | 30-15-60 | 27-11-20 |
| பஞ்சு நிகிதம் | 0-3-30 | 0-3-30 | 0-3-30 | 0-3-30 | 0-3-30 |
| சாராய நிகிதம் | 6-2-20 | 6-0-0 | 12-0-0 | 12-0-0 | 9-0-0 |
| மொத்த வருவாய் | 295-0-0 | 337-18-0 | 364-0-0 | 150-0-0 | 142-14-50 |

க- கலம்; ம- மரக்கால்; ப- படி; வ - வராகன்; ப- பணம்; கா- காசு

அட்டவணை - 5.இ — வருவாய், திருக்கச்சியூர்

| தானியம் | 1762 | 1763 | 1764 | 1765 | 1766 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதாயம் | க-ம-ப | வ-ப-கா | க-ம-ப | வ-ப-கா | க-ம-ப | வ-ப-கா | க-ம-ப | வ-ப-கா | க-ம-ப | வ-ப-கா |
| நெல் | 633-0-7 | 180-31-40 | 297-0-5 | 132-0-45 | 637-8-2 | 151-15-15 | 646-0-6 | 161-18-45 | 831-2-5 | 182-28-75 |
| வரகு | | | | | 84-6-2 | 31-21-30 | 62-0-6 | 12-14-50 | 66-3-4 | 13-9-25 |
| கேழ்வரகு | 1-7-6 | 0-20-65 | 0-9-5 | 0-19-10 | 24-4-0 | 17-5-50 | 46-3-6 | 18-16-25 | 53-0-1 | 17-24-15 |
| பயறு | | | 0-3-3 | 0-7-70 | 8-8-4 | 4-12-30 | 3-11-7 | 2-0-0 | 7-9-4 | 3-32-30 |
| எள்ளு | 12-10-1 | 17-34-70 | 0-5-6 | 0-18-0 | 0-10-0 | 0-22-40 | 4-7-1 | 3-3-30 | | |
| கொள்ளு | | | | | 2-8-4 | 1-12-30 | 1-0-5 | 0-19-10 | 2-2-5 | 0-31-65 |
| துவரை | | | | | 0-5-0 | 0-9-0 | 1-2-4 | 0-21-30 | 0-5-2 | 0-10-75 |
| கம்பு | | | | | | | 0-4-1 | 0-4-40 | 2-10-5 | 0-22-40 |
| சோளம் | | | | | | | 4-9-7 | 1-21-75 | 27-11-5 | 9-11-40 |
| கூடுதல் | 647-6-7 | 198-30-30 | 298-7-3 | 133-9-45 | 752-2-4 | 206-26-35 | 770-4-4 | 200-11-65 | 891-11-7 | 228-27-45 |

க- கலம்; ம- மரக்கால்; ப- படி; வ — வராகன்; ப- பணம்; கா- காசு

அட்டவணை - 5.இ - வருவாய், திருக்கச்சியூர்

| ரொக்காதாயம் | 1762 | 1763 | 1764 | 1765 | 1766 |
|---|---|---|---|---|---|
| | *வ-ப-கா* | *வ-ப-கா* | *வ-ப-கா* | *வ-ப-கா* | *வ-ப-கா* |
| செட்டி | *0-23-5* | *0-23-5* | *0-23-5* | *0-23-5* | *0-23-5* |
| வெற்றிலைத்தோட்டம் | *0-25-0* | | | | *0-33-60* |
| பிழக்கடை கட்டணம் | *3-0-0* | *3-0-0* | *3-0-0* | *3-0-0* | *3-0-0* |
| தோரண தெரிசனம் | *0-4-40* | *0-4-40* | *0-4-40* | *0-4-40* | *0-4-40* |
| கணக்கு தட்டான் | *1-24-0* | *1-24-0* | *1-24-0* | *1-24-0* | *0-4-40* |
| குத்தகைக்குடி | | | | | *0-9-0* |
| கூடுதல் | *6-4-45* | *5-15-45* | *5-15-45* | *5-15-45* | *6-22-25* |
| குடிக்கடன் | *4-25-5* | *70-34-70* | | *3-32-50* | *3-0-35* |
| மொத்த வருவாய் | *209-24-0* | *209-24-0* | *212-6-0* | *209-24-0* | *235-13-70* |

*க- கலம்; ம- மரக்கால்; ப- படி; வ - வராகன்; ப- பணம்; கா- காசு*

அட்டவணை - 5.ஈ — வருவாய், மாங்காடு

| **தானியம் ஆதாயம்** | *1762* | |
|---|---|---|
| | **க-ம-ப** | **வ-ப-கா** |
| நெல் | *1134-6-0* | *713-24-40* |
| வரகு | *2-10-2* | *1-32-72* |
| கேழ்வரகு | *116-6-5* | *115-30-65* |
| தினை | *0-6-0* | *0-19-20* |
| பயறு | *11-9-3* | *10-33-40* |
| காராமணி | *0-8-0* | *0-27-20* |
| கொள்ளு | *0-7-5* | *0-19-55* |
| உளுந்து | *0-0-4* | *0-2-0* |
| எள்ளு | *15-10-6* | *38-1-63* |
| கூடுதல் | *1283-5-1* | |
| ரொக்காதாயம் | | |
| தோரணதெரிசனம் | | *0-18-0* |
| காரணிக வர்த்தனை | | *0-13-75* |
| குடிகள் கொடுப்பது | | *0-18-0* |
| செட்டி மாதவரி | | *0-25-70* |
| நெய்காரரர் | | *2-5-27* |
| அவிரி ஆதாயம் | | *43-18-68* |
| மாட்டுப்பட்டி | | *20-5-50* |
| கூடுதல் | | *69-17-35* |
| மொத்த வருவாய் | | *951-29-10* |

## ரொக்காதாயம்

தானியமாக அன்றி அரசுக்கு ரொக்கமாக (பணமாக ) கிடைத்து வந்த ஆதாயம் ரொக்காதாயம் என இந்த ஆவணங்களில் குறிக்கப்பெறுவதைக் காணலாம். 18-ஆம் நூற்றாண்டில் செங்கற்பட்டு பகுதியில் வழக்கிலிருந்த நாணய வகை வராகன், பணம்-காசு என்பதாகும். 80 காசுகள் கொண்டது 1 பணம் எனவும் 36 பணம் கொண்டது ஒரு வராகன் எனவும் மதிப்பிடப் பெறுவதை இந்த ஆவணங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

செட்டிகள் மாதவரி, பஞ்சுகொட்டி, நெய்க்காரரர் மத்தவரி, பிழக்கடை விகிதம், வெற்றிலைத் தோட்ட கந்தாயம், தூக்கிரி விகிதம், பஞ்சு விகிதம், சாய விகிதம், தோரண தெரிசனம், மாட்டுப்பட்டி, அவரி ஆதாயம், கணக்கு தட்டான் அடுகு

போன்ற பல்வேறு வகையான வரிகள் அல்லது கட்டணங்கள் ரொக்க ஆதாயத்தின் கீழ் பேசப்படுகின்றன.

தானிய ஆதாயத்தை நோக்கும்பொழுது ரொக்க ஆதாயம் மிகக் குறைந்த அளவாகவே காணப்படுகிறது எனலாம். கோவளம் ஏற்றுமதி இறக்குமதி வாயிலாகவே அதன் வருவாயைப் பெற்று வந்தது.

ரொக்காதாயத்தில் இடம் பெற்றுள்ள வரிகளை நோக்கும்போது இவை பல்வேறு வகை தொழில் செய்வோரிடமிருந்து தொழில் வரியாக வசூலிக்கப்பட்டிருந்தல் கூடும் என தோன்றுகிறது. உள்ளாவூர்த் தவிர மற்ற மூன்று ஊர்களிலும் செட்டி மாதவரி காணப்படுகிறது. தானிய ஆதாயம் போலவே ரொக்க ஆதாயமும், ஊருக்கு ஊர் சற்று மாறுபடுவதைக் காணமுடிகிறது. காட்டாக செட்டி மாதவரியாக மாங்காடு மற்றும் திருக்கச்சியூரில் முறையே 25 பணம் 70 காசுகள், 23 பணம் 5 காசுகளும் சிங்கப்பெருமாளிகோவிலில் 7 பணம் 60 காசுகளும் வசூலிக்கப்பட்டது. அதுபோலவே வெற்றிலைப்பயிரிடுவோரிடமிருந்து கந்தாயமாக திருக்கச்சியூர், உள்ளாவூர் மற்றும் மாங்காட்டில் முறையே 33 பணம் 60 காசுகள், 22 பணம் 55 காசுகள் மற்றும் 43 வராகன் 18 பணம் 68 காசுகள் வசூலிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. மாங்காட்டில் ரொக்க ஆதாயமாகக் கிடைத்த 69 வராகனில் பெரும்பகுதியாக 43 வராகன் வெற்றிலைத் தோட்டக் கந்தாயம் வாயிலாகவே கிடைத்து வந்தது. இந்த ஊரில் வெற்றிலைத் தோட்டக்காரர்கள் வீடுகளாக 11 வீடுகள் காணப்பட்டதும் இங்குக் கருதத்தக்கதாம். இதன் வாயிலாக இங்கு வெற்றிலை பயிரிடுதலும் ஒரு முக்கிய தொழிலாக இருந்திருப்பதை அறிய முடிகிறது. ஊருக்கு ஊர் விலை மதிப்பீடு மாற்றம், வீட்டு வரி, நில வரி, கடை வரி, வாடகை மாற்றங்கள் போன்றவை இன்றும் காணப்படுவது நிர்வாகச் செலவு, சூழல், முக்கியத்துவம், நில அமைப்பு, மக்கள் பயன்பாடு போன்றவற்றின் அடிப்படையில் அமைவதையே காட்டுகின்றன எனலாம்.

இவைதவிர பிழக்கடை விகிதம் என்ற கட்டணமும் வசூலிக்கப்பட்டதைக் காணமுடிகிறது. உள்ளாவூர், திருக்கச்சியூர் ஆகிய ஊர்களில் இவற்றைக் காணமுடிகிறது. இது குடிகளிடமிருந்து வசூலிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குடிகள் என்பது இங்கு பயிரிடும் குடிகளைக் குறிப்பதாகும். இவை தவிர, கணக்கு தட்டான் அடுகு, தோரண தெரிசனம், மாட்டுப்பட்டி, காரணிக வர்த்தனை, அவுரி ஆதாயம், தூக்கிரி விகிதம் எனப் பலதரப்பட்ட வரிகளும் வசூலிக்கப்பட்டதைக் காணமுடிகிறது.

திருக்கச்சியூர், உள்ளாவூர், சிங்கப்பெருமாள்கோவில் ஆகியவற்றைக் காட்டிலும் மாங்காடு ரொக்காதாயம் வாயிலாக அதிக வருவாயைப் பெற்று வந்துள்ளது எனலாம். கோவளத்தின் பொருளாதாரம் முழுவதும் உள்நாட்டு வாணிபத்தையே சார்ந்திருந்தது எனலாம். 1762 முதல் 1766 வரையில் கோவளம் சுங்கவரி மற்றும் ஏற்றுமதி இறக்குமதி போன்றவற்றின் வாயிலாக சுமார் 1500 வராகன்களை வருவாயாகப் பெற்று வந்தது.

## மேரைகளும் சுதந்திரங்களும்

ஒவ்வொரு கிராமத்தின் மொத்த விளைச்சலிலிருந்தும் 1/3 பகுதி சுதந்திரம் மற்றும் மேரை எனும் பெயர்களில் பல்வேறு வகை நிர்வாகப் பணிகளுக்கும், சமயம், கல்வி, கலாச்சாரத் துறைகளுக்கும் என ஒதுக்கப்பட்டிருந்ததை இந்த ஆவணங்கள் காட்டுகின்றன. மேரை சுதந்திரம் என்பன பற்றிய விளக்கத்தை ஏற்கெனவே கண்டோம். ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் சுமார் 30க்கும் மேற்பட்ட பொதுப் பணிகள் மற்றும் நிறுவனங்களுக்கு மேரையாகவும் சுதந்திரமாகவும் பங்குகள் ஒதுக்கப்பட்டிருந்ததை அறியமுடிகிறது.

கோயில்கள், மடங்கள், சத்திரங்கள், பண்டிதர்கள், வேத விற்பன்னர்கள், பள்ளி ஆசிரியர், வைத்தியர், குடிமி இசைவல்லுநர், ஆடற்கலைஞர், நாடகசாலை மக்கள் போன்ற சமய, கல்வி, கலாச்சாரத் தொடர்புடையோரும், நீர்ப் பாசனம், தானியம், அளப்பவர், கம்புகட்டி போன்றோரும் மற்றும் கிராமத்தார், குயவர், இடையர், வண்ணான், நாவிதன் போன்ற கிராமப் பொது ஊழியரும், கணக்குப் பதிவு செய்யும் கணக்கர், பாதுகாப்புப் பணியிலுள்ள காவல தூக்கிரி, வெட்டி தலையாரி என நிர்வாகப் பணியிலுள்ளவர்களும் இப்பங்குகளைப் பெற்று வந்தோரில் அடங்குவர். இப் பங்குகள் மேரையாகவும், சுதந்திரமாகவும் வழங்கப்பட்டமையால் இத் திட்டங்கள் 'சுதந்திரத் திட்டம்' 'மேரைத் திட்டம்' எனப்படுகின்றன. இவை பற்றிக் கூறும் ஏடுகளும் இப்பெயரிலேயே அமைந்துள்ளன.

இப் பங்குகளைப் பெற்று வந்தவர்களுள், கிராமக் கோயில்கள் மற்றும் கிராமப் பொதுப்பணி ஊழியர் போன்றோரின் பணிகள் அந்தந்த கிராமத்துடனேயோ அல்லது ஒரிரு அண்டை கிராமங்களுடனோ மட்டுமே தொடர்புடையதாய் விளங்கின. ஆனால் பெரிய கோயில், மடங்கள், தலைசிறந்த பண்டிதர்கள், சிறந்த கலைஞர்கள், காவல் படையாளர், கணக்கு போன்றோரின் பணிகள் பல்வேறு கிராங்களுடன் தொடர்புடையதாய் விளங்கின. இதுபோன்ற பெரிய அமைப்புகள் பணியாளர்கள் அவர்கள் பணிகளோடு தொடர்புடைய அனைத்துக் கிராங்களிலிருந்து பங்குகளைப் பெற்று வந்ததைக் காணமுடிகிறது.

மேரையாகவும், சுதந்திரமாகவும் வழங்கப்படும் இப்பங்கீடு நான்குவிதமான நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதை இந்த ஆவணங்கள் தெரிவிக்கின்றன. சூட்டடிப்பின் பொழுது சூடுதிட்டம் எனும் பெயரில் கதிராக முதலிலும், களம் அளத்தலுக்கு முன்பாக இரண்டாம் நிலையிலும், அளக்கப்பட்ட பொது தானியத்திலிருந்து மூன்றாவது நிலையிலும், தானியம் மேல் வாரம், குடிவாரமாகப் பிரிக்கப்பட்ட பின் மேல்வாரப் பகுதியிலிருந்து நான்காவது நிலையிலுமாக நான்குவித நிலைகளில் இப் பங்கீடுகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இவற்றில் முதல் இரு நிலைகளில் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் சூடு திட்டம், கையேற்புத் திட்டம் என இருவிதமாக அளிக்கப்பட்டு வந்தன. இவை இரண்டு சேர்ந்தே சுதந்திரத் திட்டம் என அழைக்கப்படுகின்றன.

மூன்றாவது நான்காவது நிலைகளில் வழங்கப்பட்ட பங்குகள் பொதுமேரை அல்லது பொதுச்செலவு எனவும் மேல்வார மேரை அல்லது மேல்வார

மேரைச்செலவு எனவும் குறிப்பிடப்படுகின்றன. இவை இரண்டும் சேர்ந்தே மேரைத்திட்டம் எனப்படுகின்றது.

சுதந்திரத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பங்குகள் பெரும்பாலும் கிராம உள்துறை, பணிகளுக்கென்றே ஒதுக்கப்பட்டிருந்தன எனலாம். கிராமக் கோயில்கள், கோயில் பணிகளோடு தொடர்புடையோர் தண்ணீர்பந்தல், வெட்டி, கம்புகட்டி, வைத்தியர், பள்ளி ஆசிரியர், பஞ்சாங்க பிராமணர், வண்ணான் நாவிதன், தச்சன், கருமான், தட்டான், சராப்பு போன்ற பலர் இத்திட்டத்தின் கீழ் பங்குகளைப் பெற்றனர்.

மேரைத் திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் பல கிராமங்கள் இணைந்த பெரிய பகுதியாகிய நாடு எனும் பிரிவுடன் தொடர்புடைய பணியாளர், பெரிய கோயில்கள், பெரும் பண்டிதர், வேதவித்தகர்கள், மாகாண அளவிலான அலுவலர் எனப் பலரும் பெற்றுவந்ததைக் காணமுடிகிறது.

மேலும் கிராமக் கணக்கு, பாதுகாப்பு, பணிகளை மேற்கொண்டு வந்த காவல் படைத் தலைவரான பாளையக்காரர், கிராம முக்கிய் குடிகளாகிய காணியாட்சிக் குடிகள், தச்சன், கருமான், சராப்பு, கானுகோயி, தேசமுகி போன்ற பலரும் மேரை மற்றும் சுதந்திரம் ஆகிய இரு திட்டங்களின் கீழும் பங்குகளைப் பெற்று வந்தனர்.

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட இந்த 10 ஊர்களில் கோடம்பாக்கம், பெருநகர், மாங்காடு, திருக்கச்சியூர், சிங்கப்பெருமாள் கோவில் ஆகிய 5 ஊர்களே மேரை மற்றும் சுதந்திரத் திட்ட ஏடுகளைக் கொண்டு விளங்குகின்றன. இந்த 5 ஊர்களிலிருந்து வழங்கப்பட்ட சுதந்திரம், மேரை யார் யாருக்கு எந்த அளவு வழங்கப்பட்டன போன்றவற்றை அட்டவணை - 7 அ.ஆ.இ ஆகிய மூன்றிலும் காணலாம். இவற்றுள் அட்டவணை 7-அ சுதந்திரத் திட்டத்தின்கீழ் பங்குகள் பெற்றவர்களையும், அட்டவணை 7-ஆ மேரைத் திட்டத்தின்கீழ் பங்குகள் பெற்றவர்களையும் அட்டவணை - இ மேரை, சுதந்திரம் இரண்டிலிருந்தும் பங்குகள் பெற்றவர்களையும் அவற்றிலிருந்து யார் யாருக்கு எத்தனை சதவிகிதம் சென்றுள்ளது என்பதையும் காட்டுவதாக அமைந்துள்ளன.

கோடம்பாக்கத்தில் 21 அமைப்புகள் சுதந்திரத்தையும் 14 அமைப்புகள் மேரையையும் பெற்றுவந்தன. சிங்கப்பெருமாள் கோவிலில் 17 அமைப்புகள் சுதந்திரத்தையும் 25 பேர்கள் மேரையையும் பெற்று வந்துள்ளனர். அதுபோல திருக்கச்சியூர் 24 சுதந்திரப் பங்குகளையும் 17 மேரைப் பங்குகளையும் அளித்துவந்தன. பெருநகரில் 39 நிறுவனங்கள் சுதந்திரத்தையும் 23 அமைப்புகள் மேரையையும் பெற்று வந்துள்ளன. இந்த ஐந்து ஊர்களைச் சேர்ந்து 16 அமைப்புகள் அல்லது பணியாளர்கள் மேரை மற்றும் சுதந்திரம் இரண்டையும் பெற்று வந்துள்ளதைக் காணமுடிகிறது.

இந்த ஐந்து ஊர்களும் கிராமக் கோயில்கள், கோயில் பணியாளர், சத்திரம், பூந்தோட்டம், கிராமப் பொது ஊழியர், கம்புகட்டி, வெட்டி, தலையாரி, தச்சன், கருமான், சராப்பு, வைத்தியர், பள்ளி ஆசிரியர், அங்காசாலை, பஞ்சாங்கம்

போன்றோர் சுதந்திரங்களைப் பெற்றவர்களுள் அடங்குவர். கிராமப் பொது ஊழியர், ஏரிமேரை, பெரியகோயில்கள், கானுகோயி, தேசமுகி போன்றோர் மேரைகளைப் பெற்று வந்துள்ளனர்.

இந்த 5 ஊர்களில் அதிக அளவு மேரை பெற்று வந்த அமைப்பு மற்றும் பணியாளர்களாகப் பின் வருவோரைக் குறிப்பிடலாம். கணக்கு, காவல்தூக்கிரி, தட்டான், சராப்பு, வெட்டி, தச்சன் கருமான், காணியாட்சி குடிகள், ஏரிமேரை, காணி குப்பம், களம் தானியம்.

மேரை மற்றும் சுதந்திரமாகக் கோடம்பாக்கம் சிங்கப்பெருமாள் கோவில், திருக்கச்சியூர், பெருநகர், மாங்காடு ஆகியவை முறையே 25%, 44%, 32%, 42%, 36%, அளித்து வந்துள்ளன. இவற்றின் சராசரி 35% ஆகக் காணப்படுகிறது. மாங்காடு மற்றும் திருக்கச்சியூர் ஆகிய ஊர்கள் இவற்றையும் தாண்டி 44% மற்றும் 42% அளித்துள்ளது சிறப்பிற்குரியதாகத் தோன்றுகிறது.

அட்டவணை 6.அ- சுதந்திர திட்டம்

| வ.எண். | சுதந்திரம் பெறுபவர் | கோடம்பாக்கம் | | | சி.பெ.கோவில் | | | திருக்கச்சியூர் | | | பெருநகர் | | | மாங்காடு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | க | ம | ப | க | ம | ப | க | ம | ப | க | ம | ப | க | ம | ப |
| 1. | பிள்ளையார் | | | | | | | | | | 0 | 1 | 2 | 0 | 1 | 4 |
| 2. | ஈஸ்வரன் | | | | | | | | | | | | | 0 | 1 | 4 |
| 3. | பெருமாள் | | | | | | | | | | | | | 0 | 1 | 4 |
| 4. | காமாட்சி | | | | | | | | | | | | | 0 | 1 | 4 |
| 5. | பஞ்சாங்கம் | 0 | 0 | 1 | 0 | 2 | 4 | 0 | 1 | 2 | 0 | 2 | 4 | 0 | 1 | 4 |
| 6. | வேதபாராயணம் | | | | | | | | | | | | | 0 | 3 | 2 |
| 7. | நாகசரம், டமாரம், நட்டுவர் | | | | | | | 0 | 5 | 0 | 0 | 2 | 4 | 0 | 8 | 0 |
| 8. | தச்சன், கருமான் | 0 | 5 | 4 | 2 | 1 | 0 | 1 | 0 | 4 | 0 | 11 | 2 | 1 | 3 | 0 |
| 9. | சராப்பு | | | | 1 | 0 | 4 | 0 | 6 | 2 | 0 | 5 | 0 | 0 | 7 | 2 |
| 10. | குசவன் | 0 | 2 | 2 | 0 | 3 | 6 | 0 | 3 | 1 | 0 | 3 | 1 | 0 | 11 | 4 |
| 11. | வண்ணான் | 0 | 3 | 0 | 0 | 6 | 2 | 0 | 2 | 4 | 0 | 5 | 5 | 0 | 8 | 6 |
| 12. | நாவிதன் | | | | 0 | 6 | 2 | 0 | 2 | 4 | 0 | 5 | 0 | 0 | 7 | 2 |
| 13. | பணிசேவன் | 0 | 0 | 6 | | | | 0 | 2 | 4 | 0 | 11 | 2 | 0 | 7 | 2 |
| 14. | ஒச்சன் | | | | | | | | | | | | | 0 | 3 | 0 |
| 15. | குடலைப்பணிக்கன் | 0 | 0 | 6 | | | | | | | | | | 0 | 3 | 0 |
| 16. | வெட்டி | 0 | 2 | 5 | 0 | 2 | 4 | 1 | 1 | 6 | | | | 0 | 8 | 0 |

அட்டவணை 6.அ- சுதந்திர திட்டம் (தொடர்ச்சி)

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17. | கம்புக்கட்டி | | | | | | | 0 | 2 | 4 | 0 | 10 | 0 | 0 | 4 | 2 |
| 18. | பூந்தோட்டம் | 0 | 0 | 6 | | | | 0 | 1 | 2 | 0 | 1 | 7 | 0 | 2 | 6 |
| 19. | இடையன் | | | | 0 | 3 | 6 | 0 | 1 | 7 | 0 | 0 | 5 | 0 | 1 | 4 |
| 20. | அங்காசாலை | | | | | | | | | | | | | 0 | 1 | 4 |
| 21. | தண்ணீர்ப் பந்தல் | 0 | 0 | 4 | | | | | | | | | | 0 | 1 | 2 |
| 22. | வைத்தியர் | | | | | | | | | | | | | 0 | 1 | 2 |
| 23. | தமிழ் வாத்தியார் | | | | | | | | | | 0 | 3 | 1 | 0 | 1 | 2 |
| 24. | பூரிகை | | | | | | | | | | | | | 0 | 1 | 2 |
| 25. | குடிமி | 0 | 0 | 3 | 0 | 3 | 6 | 0 | 2 | 4 | 0 | 7 | 4 | 0 | 1 | 2 |
| 26. | அன்னம் பக்கிரி | | | | | | | | | | | | | 0 | 1 | 2 |
| 27. | வள்ளுவன் | | | | | | | 0 | 1 | 2 | 0 | 1 | 2 | 0 | 2 | 4 |
| 28. | அம்மன் பிடாரி | 0 | 1 | 4 | 0 | 4 | 8 | 0 | 5 | 0 | 0 | 5 | 0 | 0 | 1 | 2 |
| 29. | தேவர்குப்பம் | 0 | 3 | 0 | 1 | 8 | 0 | 0 | 10 | 0 | 0 | 10 | 0 | | | |
| 30. | ஈட்டிவிலக்கு | 0 | 1 | 0 | | | | | | | | | | | | |
| 31. | குப்பத்தம் | 0 | 1 | 0 | | | | | | | | | | | | |
| 32. | தண்ணீர்க்காரி | 0 | 0 | 6 | | | | 0 | 1 | 2 | 0 | 1 | 7 | | | |
| 33. | கிராமக்குப்பம் | 0 | 2 | 0 | 0 | 10 | 0 | 0 | 10 | 0 | | | | | | |
| 34. | பக்கிரிக்குப்பம் | 0 | 0 | 4 | | | | | | | | | | | | |
| 35. | மாணிக்கத்தான் | 0 | 0 | 4 | | | | | | | | | | | | |

அட்டவணை 6.அ- சுதந்திர திட்டம் (தொடர்ச்சி)

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 36. | முரட்டுச்சரடு | 0 | 1 | 4 | | | | | | | | | | | | |
| 37. | பொலிப்பாட்டு | 0 | 0 | 4 | | | | | | | | | | | | |
| 38. | பிடுகு நரசிம்மாச்சாரி | | | | | | | 0 | 1 | 2 | 0 | 1 | 7 | | | |
| 39. | குடிகள் | | | | | | | 1 | 8 | 0 | 4 | 2 | 0 | | | |
| 40. | படியாள் | | | | 7 | 8 | 4 | 2 | 11 | 0 | | | | | | |
| 41. | காபல் தூக்கிரி | 0 | 5 | 0 | 2 | 3 | 4 | 2 | 11 | 0 | 1 | 7 | 3 | 2 | 0 | 0 |
| 42. | கணக்கு | | | | 1 | 5 | 4 | 1 | 5 | 4 | 0 | 5 | 0 | | | |
| 43. | மேளம் | | | | | | | | | | 0 | 1 | 2 | | | |
| 44. | தாசி | | | | | | | 0 | 10 | 0 | | | | | | |
| 45. | கோயில் பரிசாரகன் | | | | 0 | 11 | 2 | | | | | | | | | |
| 46. | அளவுக்காரர் | | | | 0 | 11 | 2 | | | | | | | | | |
| 47. | தர்மனாரா | | | | | | | | | | 0 | 0 | 5 | | | |
| 48. | அய்யனார் | | | | | | | | | | 0 | 0 | 5 | | | |
| 49. | அங்காளம்மை | | | | | | | | | | 0 | 0 | 5 | | | |
| 50. | தோப்புப் பண்டாரம் | | | | | | | | | | 0 | 5 | 5 | | | |
| 51. | முத்து பண்டாரம் | | | | | | | | | | 0 | 1 | 2 | | | |
| 52. | தேவாரம் | | | | | | | | | | 0 | 1 | 2 | | | |
| 53. | திருவிளக்கு | | | | | | | | | | 0 | 1 | 2 | | | |
| 54. | கோயிற்பணியாளர் | | | | | | | | | | 0 | 1 | 2 | | | |

அட்டவணை 6.அ- சுதந்திர திட்டம் (தொடர்ச்சி)

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 55. | ஆத்துக்கால் சேவகர் | | | | | | | | | | 0 | 3 | 6 | | | |
| 56. | மானோட்டி | | | | | | | | | | 0 | 3 | 6 | | | |
| 57. | ஒத்து ஒடல் | | | | | | | | | | 0 | 1 | 2 | | | |
| 58. | தோட்டி | | | | | | | | | | 1 | 4 | 2 | | | |
| 59. | சத்திரக்குப்பம் | | | | | | | | | | 0 | 10 | 0 | | | |
| 60. | ஊர்குப்பம் | | | | | | | | | | 0 | 10 | 0 | | | |
| 61. | மசூதி | | | | | | | | | | 0 | 2 | 4 | | | |
| 62. | கங்காணம் | 0 | | | | | | | | | 0 | 11 | 2 | | | |
| | மொத்த சுதந்திரம் | 2 | 9 | 3 | 21 | 9 | 2 | 16 | 11 | 6 | 19 | 9 | 4 | 11 | 3 | 0 |

அட்டவணை 6 ஆ - மேரை திட்டம்

| வ.எண். | மேரை பெறுபவர் | கோடம்பாக்கம் | | | சி.பெ.கோயில் | | | திருக்கச்சியூர் | | | பெருநகர் | | | மாங்காடு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | க | ம | ப | க | ம | ப | க | ம | ப | க | ம | ப | க | ம | ப |
| 1. | களம் | 6 | 3 | 0 | 6 | 11 | 6 | | | | | | | 5 | 5 | 0 |
| 2. | படியாள் | | | | | | | 2 | 0 | 4 | 7 | 8 | 2 | | | |
| 3. | தேவர் குப்பம் | | | | | | | | | | | | | 0 | 7 | 4 |
| 4. | கிராமக் குப்பம் | | | | | | | | | | | | | 0 | 10 | 0 |
| 5. | அங்காசாலை | | | | | | | | | | 0 | 3 | 6 | | | |
| 6. | கணக்கு | 2 | 10 | 7 | 2 | 1 | 0 | 1 | 6 | 6 | 0 | 8 | 4 | 0 | 10 | 2 |
| 7. | காவல் தூக்கிரி | 0 | 7 | 3 | 2 | 1 | 0 | 1 | 6 | 6 | 1 | 1 | 3 | | | |
| 8. | கச்சன் கருமான் | | | | 1 | 4 | 6 | | | | 1 | 5 | 2 | 0 | 5 | 0 |
| 9. | தட்டான் | | | | 0 | 8 | 3 | 0 | 6 | 2 | | | | | | |
| 10. | சராப்பு | | | | 0 | 5 | 6 | | | | 0 | 3 | 5 | 0 | 2 | 4 |
| 11. | வெட்டி | | | | | | | | | | | | | 0 | 5 | 0 |
| 12. | மாணிக்கத்தான் | | | | | | | | | | | | | 0 | 5 | 0 |
| 16. | வைத்தியர் | | | | | | | | | | | | | 0 | 5 | 0 |
| 17. | வண்ணன் | | | | | | | | | | 0 | 3 | 5 | | | |
| 18. | நாவிதன் | | | | | | | | | | 0 | 3 | 5 | | | |
| 19. | சமை | | | | | | | | | | | | | 1 | 0 | 4 |
| 20. | ஏரிமேரை | 3 | 10 | 6 | 3 | 10 | 4 | 2 | 0 | 4 | 2 | 6 | 0 | 3 | 0 | 0 |
| 21. | தோவத்திரா | | | | | | | | | | 1 | 8 | 0 | | | |

அட்டவணை 6 ஆ - மேரை திட்டம் (தொடர்ச்சி)

| வ.எண். | மேரை பெறுபவர் | கோடம்பாக்கம் | | | சி.பெ.கோயில் | | | திருக்கச்சியூர் | | | பெருநகர் | | | மாங்காடு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | க | ம | ப | க | ம | ப | க | ம | ப | க | ம | ப | க | ம | ப |
| 22. | சரிமதுமு | | | | | | | | | | 0 | 10 | 10 | 0 | 9 | 0 |
| 23. | கானுக்கோயி | 2 | 3 | 7 | 0 | 11 | 5 | 1 | 0 | 2 | 1 | 8 | 0 | 2 | 2 | 7 |
| 24. | தேசமுகி | | | | 1 | 11 | 2 | 2 | 0 | 4 | 0 | 10 | 0 | | | |
| 25. | வேதபாராயணம் | | | | | | | | | | | | | 0 | 5 | 0 |
| 26. | திருப்போரூர் | 0 | 9 | 2 | | | | | | | | | | 0 | 8 | 7 |
| 27. | கபாலீஸ்வரர் | 0 | 9 | 2 | | | | | | | | | | 0 | 8 | 7 |
| 28. | வரதர் | 0 | 4 | 5 | 0 | 11 | 5 | | | | | | | 0 | 4 | 4 |
| 29. | காமாட்சி | 0 | 4 | 5 | | | | | | | | | | 0 | 4 | 4 |
| 30. | திருமழிசை ஆழ்வார் | 0 | 9 | 2 | | | | | | | | | | 0 | 8 | 7 |
| 31. | கும்பகோணம் சிக்குடையார் | 0 | 4 | 5 | | | | | | | | | | 0 | 4 | 4 |
| 32. | பிள்ளைலோகாச்சாரி | | | | 0 | 5 | 7 | | | | | | | | | |
| 33. | திருக்கச்சூர் கோவில் | | | | | | | 2 | 5 | 3 | | | | | | |
| 34. | சிங்கப்பெருமாள் கோவில் | | | | 0 | 11 | 5 | 1 | 2 | 0 | | | | | | |
| 35. | வெங்கீஸ்வரர் | 0 | 5 | 4 | | | | | | | | | | | | |
| 36. | தௌசிங்கர் | 0 | 4 | 5 | | | | | | | | | | 0 | 4 | 4 |
| 37. | பெருமாள் | | | | | | | | | | | | | | | |

அட்டவணை 6 ஆ - மேரை திட்டம் (தொடர்ச்சி)

| வ.எண். | மேரை பெறுபவர் | கோடம்பாக்கம் | | | சி.டெ.கோயில் | | | திருக்கச்சியூர் | | | பெருநகர் | | | மாங்காடு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | க | ம | ப | க | ம | ப | க | ம | ப | க | ம | ப | க | ம | ப |
| 38. | ஈஸ்வரன் | | | | | | | | | | 0 | 10 | 0 | | | |
| 39. | காஞ்சி கோவில் | | | | | | | | | | 0 | 10 | 0 | | | |
| 40. | காணி | 2 | 1 | 4 | 2 | 1 | 4 | | | | 1 | 8 | 0 | 2 | 11 | 0 |
| 41. | மகுதி | | | | | | | 1 | 0 | 2 | | | | | | |
| 42. | மொத்த மேரை | 22 | 5 | 1 | 22 | 11 | 1 | 15 | 3 | 3 | 23 | 0 | 0 | 25 | 1 | 2 |

அட்டவணை 6.இ - மொத்த மேரைகளும், சுதந்திரங்களும்

| வ.எண். | சுதந்திரம் + மேரை பெறுபவர்கள் | கோடம்பாக்கம் | | | | சிங்கப் பெருமாள் கோவில் | | | | திருக்கச்சியூர் | | | | பெருநகர் | | | | மாங்காடு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | க | ம | ப | % | க | ம | ப | % | க | ம | ப | % | க | ம | ப | % | க | ம | ப | % |
| *1.* | ஒச்சல் | | | | | | | | | | | | | | | | | *0* | *3* | *0* | *0.69* |
| *2.* | ஒத்து ஓடல் | | | | | | | | | | | | | *0* | *1* | *2* | *0.24* | | | | |
| *3.* | தெளிசிங்கர் | *0* | *4* | *5* | *1.53* | | | | | | | | | | | | | *0* | *4* | *4* | *1.03* |
| *4.* | பெருமாள் | | | | | | | | | | | | | | | | | *0* | *1* | *4* | *0.34* |
| *5.* | பொலிப்பாட்டு | *0* | *0* | *4* | *0.17* | | | | | | | | | | | | | | | | |
| *6.* | வெங்கீஸ்வரர் | *0* | *5* | *4* | *1.82* | | | | | | | | | | | | | | | | |
| *7.* | வெட்டி | *0* | *2* | *5* | *0.87* | *0* | *2* | *4* | *0.47* | *1* | *1* | *6* | *3.55* | | | | | *1* | *1* | *0* | *2.98* |
| *8.* | ஈஸ்வரன் | | | | | | | | | | | | | *0* | *10* | *0* | *1.95* | *0* | *1* | *4* | *0.34* |
| *9.* | ஈட்டிவிலக்கு | *0* | *1* | *0* | *0.33* | | | | | | | | | | | | | | | | |
| *10.* | சத்திரக்குப்பம் | | | | | | | | | | | | | *0* | *10* | *0* | *1.95* | | | | |
| *11.* | சரிமதுமு | | | | | | | | | | | | | *0* | *10* | *0* | *1.95* | *0* | *9* | *0* | *2.06* |
| *12.* | சராப்பு | | | | | *1* | *6* | *2* | *3.4* | *0* | *6* | *2* | *1.61* | *0* | *8* | *5* | *1.68* | *0* | *9* | *6* | *2.23* |
| *13.* | சிங்கப்பெருமாள் | | | | | *0* | *11* | *5* | *2.17* | *1* | *0* | *2* | *3.16* | | | | | | | | |
| *14.* | சமை | | | | | | | | | | | | | | | | | *1* | *0* | *4* | *2.03* |
| *15.* | திருவிளக்கு | | | | | | | | | | | | | *2* | *5* | *3* | *7.59* | | | | |
| *16.* | திருக்கச்சூர் கோவில் | | | | | | | | | *2* | *5* | *3* | *7.59* | | | | | | | | |

அட்டவணை 6.இ - மொத்த மேரைகளும், சுதந்திரங்களும் (தொடர்ச்சி)

| வ.எண். | சுதந்திரம் + மேரை பெறுபவர்கள் | கோடம்பாக்கம் | | | | சிங்கப் பெருமாள் கோவில் | | | | திருக்கச்சியூர் | | | | பெருநகர் | | | | மாங்காடு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | க | ம | ப | % | க | ம | ப | % | க | ம | ப | % | க | ம | ப | % | க | ம | ப | % |
| 17. | திருமழிசை ஆழ்வார் | 0 | 9 | 2 | 3.06 | | | | | | | | | | | | | 0 | 8 | 7 | 2.03 |
| 18. | திருப்போரூர் கந்தர் | 0 | 9 | 2 | 3.06 | | | | | | | | | | | | | 0 | 8 | 7 | 2.3 |
| 19. | தச்சன் கருமான் | 0 | 5 | 4 | 1.82 | 3 | 5 | 6 | 7.78 | 1 | 0 | 4 | 3.23 | 2 | 4 | 4 | 5.55 | 1 | 8 | 0 | 4.58 |
| 20. | தண்ணீர்ப் பந்தல் | 0 | 0 | 4 | 0.17 | | | | | | | | | | | | | 0 | 1 | 2 | 0.29 |
| 21. | தண்ணீர்க்காரி | 0 | 0 | 6 | 0.25 | | | | | 0 | 1 | 2 | 0.32 | 0 | 1 | 7 | 0.37 | | | | |
| 22. | தட்டான் | | | | | 0 | 8 | 3 | 1.56 | 0 | 6 | 2 | 1.61 | | | | | | | | |
| 23. | தர்மராசா | | | | | | | | | | | | | 0 | 0 | 5 | 0.12 | | | | |
| 24. | தாசி | | | | | | | | | 0 | 10 | 0 | 2.58 | | | | | | | | |
| 25. | தமிழ் வாத்தியார் | | | | | | | | | | | | | 0 | 3 | 1 | 0.61 | 0 | 1 | 2 | 0.29 |
| 26. | அன்னம் பக்கிரி | | | | | | | | | | | | | | | | | 0 | 1 | 2 | 0.29 |
| 27. | அய்யனார் | | | | | | | | | | | | | 0 | 0 | 5 | 0.12 | | | | |

## *மானியங்கள்*

*செங்கற்பட்டு கிராமங்கள் மொத்த விளைச்சலில் ஒரு பகுதியை மேரை, சுதந்திரம் பங்குகளாக சமயப் பொருளாதார, கல்வி கலாச்சார நிறுவனங்களுக்கு அளித்து அவற்றைப் பேணிப் பாதுகாத்து வந்ததை ஏற்கெனவே கண்டோம். அதுபோலவே மொத்த விளை நிலங்களிலிருந்தும் ஒரு பகுதியை மானியமாக இது போன்ற நிறுவனங்களுக்கு அளித்து வந்தமையும் இந்த ஆவணங்களின் வழி அறியப்படுகிறது. இங்கு மானியம் என்பது வரிவிதிப்பிற்குட்பட்ட வாரப்பற்று நிலங்களின் விளைச்சலிலிருந்து மேல் வாரத்தின் ஒரு பகுதியைப் பெறுவதைக் குறிக்கும்.*

*மொத்த விளைநிலத்தில் 25% மானியங்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்ததையும், கிராம மிராசு மற்றும் அன்னியர்களுக்கும் இவை*

*தும்பால் பழ மானியம்*

*தும்பால் புது மானியம்*

*மேல்வாரபாதி பழமானியம்*

*மேல்வாரபாதி புதுமானியம்*

*என இவை பலவிதங்களில் அளிக்கப்பட்டதையும் அட்டவணை 1-ஆ வாயிலாக முன்பே கண்டோம்.*

*இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட 10 ஊர்களில் கோவளம் நீங்கலாக 9 ஊர்களின் மானிய விவரங்கள் அட்டவணை-8ல் தரப்பட்டுள்ளன. இவ்வட்டவணையில் ஒவ்வொரு கிராமத்திலும் விளைச்சலுக்குட்படுத்தப்பட்ட வாரப்பற்று செய்கால் நஞ்சை நிலத்தில் மொத்த நஞ்சை மானியம் எத்தனை சதவிகிதம் என்பதும், வாரப்பற்று செய்கால் புஞ்சை நிலத்தில் புஞ்சை மானியம் எத்தனை சதவிகிதம் என்பதும் மொத்த வாரப்பற்று செய்கால் நிலங்களில் மொத்த மானியங்கள் எத்தனை சதவிகிதம் என்பதும் கணக்கிட்டுக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.*

*மேரை மற்றும் சுதந்திரம் பங்குகள் மாங்காடு மற்றும் சிங்கப்பெருமாள் கோவில் ஆகிய ஊர்களில் மிக அதிகமாக 40% மேலாக வழங்கப்பட்டதைப் போலவே இவ்வூர்களின் மானிய நிலங்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த நிலங்களின் சதவிகிதமும் மிக அதிகமாக இருப்பதை அட்டவணையில் காணலாம். மிக அதிகமாக மாங்காட்டில் 51.46% மானிய நிலங்களாகக் காணப்பட்டன. இது மிகவும் சிறப்பாகக் கருதத்தக்கது. இதற்கடுத்தபடியாக, திருப்பாசூரில் 47.7%*

*ஆகவும் சிங்கப்பெருமாள் கோவிலில் 47% ஆகவும் திருக்கச்சியூரில் 41.4% ஆகவும் மானிய நிலங்கள் காணப்படுதல் சிறப்பானதாகும். ஸ்ரீபெரும்புதூர், கல்குளம், கோடம்பாக்கம் ஆகிய ஊர்கள் 25.6%, 27.5%, 22.6% நிலங்களை மானியத்திற்கென ஒதுக்கியிருந்ததைக் காணமுடிகிறது. உள்ளாவூர் மற்றும் பெருநகரில் மிகக் குறைவாக 12.9% மற்றும் 13.7% என்றவாறு மானிய நிலங்கள் மிகக்குறைவாகவே காணப்பட்டன. மானிய நிலங்களின் மிகுதிப்பாடு கோயில் சமய வழிபாடு மிக்கிருந்த இடங்களில் அதிகமாகக் காணப்பட்டதாகக் கொள்ளலாம்.*

அட்டவணை 7- மானியங்கள்

| வாரப்பற்றில் மானிய நிலங்கள் | உள்ளாவூர் | கல்குளம் | கோடம்பாக்கம் | கோவளம் | சி.பெ. கோவில் | திருக்கச்சியூர் | திருப்பாசூர் | பெருநகர் | மாங்காடு | ஸ்ரீபெரும்பு தூர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ( காணியில் ) | | | | | | | | | |
| வாரப்பற்று செய்கால் - நஞ்சை | 441 ¾ | 110 | 193 | - | 2 ¼ | 112 | 214 | 330 | 395 5/8 | 410 ½ |
| மொத்த மானியம் - நஞ்சை | 58 ¼ | 32 ¾ | 61 ¾ | - | 10 ¾ | 78 | 186 | 67 ¾ | 208 | 127 ¼ |
| மொத்த வாரப்பற்றில் மானியம் - நஞ்சை சதவிகிதம் % | 11.7 % | 22.9 % | 24.2 % | - | 82.7 % | 19.5% | 41.05% | 17.03% | 65.5% | 23.7 % |
| வாரப்பற்று செய்கால் - புஞ்சை | 24 | 27 ¼ | 25 | - | 20 | 15 | 9 | 370 | 98 ½ | 69 ½ |
| மானியம் - புஞ்சை | 11 | 19 ¼ | 2 | - | 9 | 12 | 17 | 43 ¾ | - | 37 ¾ |
| புஞ்சை மானிய நிலங்கள் சதவிகிதம் % | 31.4% | 41.4% | 7.4% | - | 31.03% | 44.4% | 55% | 10.5% | - | 35.2% |
| வாரபற்று - நஞ்சை + புஞ்சை | 465 ¾ | 137 ¼ | 218 | - | 22 ¼ | 127 | 223 | 700 | 404 1/8 | 480 |
| மொத்த மானியம் - நஞ்சை + புஞ்சை | 69 ¼ | 52 | 63 ¾ | - | 19 ¾ | 90 | 203 | 111 ½ | 208 | 165 |
| மொத்த மானியம் - நஞ்சை + புஞ்சை சதவிகிதம் % | 12.9% | 27.5% | 22.6% | - | 47% | 41.4% | 47.7% | 13.7% | 51.46% | 25.6% |
| வாரபற்று - நஞ்சை + புஞ்சை | 465 ¾ | 137 ¼ | 218 | - | 22 ¼ | 127 | 223 | 700 | 404 1/8 | 480 |
| மொத்த மானியம் - நஞ்சை + புஞ்சை | 69 ¼ | 52 | 63 ¾ | - | 19 ¾ | 90 | 203 | 111 ½ | 208 | 165 |
| மொத்த மானியம் - நஞ்சை + புஞ்சை சதவிகிதம் % | 12.9% | 27.5% | 22.6% | - | 47% | 41.4% | 47.7% | 13.7% | 51.46% | 25.6% |

மாங்காட்டில் மானிய நிலங்கள் அனைத்தும் நஞ்சை நிலங்களாகவே காணப்படுவது சிறப்பாகும். சிங்கப்பெருமாள் கோவிலிலும் நஞ்சை மானிய நிலங்கள் 82.7% ஆக இருப்பதைக் காணலாம். இவற்றை நோக்கும்பொழுது மாங்காடு மற்றும் சிங்கப்பெருமாள் கோவில் ஆகிய ஊர்கள் சமூகப் பொருளாதார கலாச்சார மையங்களின் பராமரிப்பிற்கென அதிகம் ஒதுக்கீடுகளைச் செய்திருப்பதன் வாயிலாக அவற்றுடன் கொண்ட தொடர்பினை உணர் முடிகிறது.

இனி இம்மானியங்கள் யார் யாருக்கு வழங்கப்பட்டன என்பதைக் காண்போம். மேரை மற்றும் சுதந்திரங்களைப் பெற்றுவந்த அமைப்புகளும் நிர்வாகப் பணியாளர்களும் பெரும்பாலும் மானியங்களும் பெற்று வந்ததைக் காண முடிகிறது. கிராம மிராசுதாரர்கள், கோயில்கள், கோயிற்பணியாளர், நிர்வாகப் பணியாளருக்கும் கணக்கு காவல், தூக்கிரி, சராப்பு மற்றும் கிராமப் பொது ஊழியர்கள், பாசனத்துறை, பெரியகோயில், மடங்கள், கலாச்சார மையங்கள், அறச்சாலைகள், வைத்தியர், குடிமி, எனப் பலரும் இதுபோன்ற மானியங்களைப் பெற்றவர்களில் அடங்குவர். இந்தப்பத்து கிராமங்களிலும் மானியங்கள் பெற்றவர்களின் பட்டியல் வருமாறு:

- கிராம மிராசுதாரர்
- ஈஸ்வரன்
- பெருமாள்
- அர்ச்சகர்
- காணி
- கணக்கு
- காவல்
- தூக்கிரி
- சராப்பு
- காணியாட்சிக்காரரர்
- மேன்காவல்
- வண்ணான்
- நாவிதன்
- குசவன்
- மலராசா
- பண்டிதர்
- பட்டர்
- கம்புகட்டி
- வெட்டி
- தலையாரி
- தட்டான்
- குடிமி
- கூத்தாடி
- கோயில் பாட்டகன்
- மசூதி
- முல்லா மானியம்
- பக்கிரி மானியம்
- துலுக்கர் மானியம்
- பூதபுரியீஸ்வரர்
- வெங்கீஸ்வரர்
- பாலாண்டீஸ்வரர்
- மடம்
- வீணைக் கேசவ ஐயர்
- தண்ணீர்ப்பந்தல்

- நட்டுவர்
- நாகசரம்
- முட்டுக்காரன்
- அங்காளம்மை
- அம்மன் பிடாரி
- ஐய்யனார்
- தர்மராசா
- புத்தர்கோயில்
- அங்காசாலை
- சரிமதுமு
- வேதவிர்த்தி
- தமிழ் வாத்தியார்
- பூந்தோட்டம்
- பண்டாரம்
- கோயில் ஸ்தானிகர்
- சாஸ்திரியார்
- பாட்டகன்
- சுயம்பாகி
- ராயசம்
- நிவந்தக்காரர்
- பணிசேவன்
- பூதபுரியீஸ்வரர்
- எத்திராசவள்ளி தாயார் மானியம்
- தோட்டி மானியம்
- கவி வீரராகவ முதலியார் மானியம்
- வாசீஸ்வர மானியம்
- சையது மானியம்
- சைதாப்பேட்டை மானியம்
- பொலிசட்டி மானியம்
- கந்தஸ்வாமி மானியம்
- வரதர் மானியம்
- பாகவதர் மானியம்

இம் மானியங்கள் வாயிலாக ஒவ்வொரு நிறுவனமும் பெற்றுவந்த பங்கு மிக அதிகமாக இல்லாவிடினும் மேல்வாரத்தில் ஒரு பங்கினை உரிமையாகப் பெறுவதன் வாயிலாக, அரசாண்மையில் பங்கு பெறுதல் என்ற நிலையில் இது சிறப்பிற்குரியதாகவே கருதப்படும் எனலாம்.

### சமய கலாச்சார மையங்கள்

18 ஆம் நூற்றாண்டில் சிறப்புடன் விளங்கிய சுமார் 20க்கும் மேற்பட்ட சமய, கலாச்சார நிறுவனங்களான பெரிய கோயில், மடங்கள் போன்ற மிக அதிகமான இடங்களிலிருந்து பங்குகள் பெற்றுவந்ததன் மூலம் சிறப்புடன் திகழ்ந்தன.

அவற்றுள் சுமார் 15 க்கு மேற்பட்ட நிறுவனங்கள் நூற்றுக்கும் அதிகமான கிராமங்களிலிருந்து பங்கினைப் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கதாம்.

அவற்றின் பட்டியல் வருமாறு:

| | **கோயில் மற்றும் மடங்கள்** | **மேரை, மானியம் அளித்த கிராமங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் வரதராஜ சுவாமி | 1265 |
| 2 | சிங்கப்பெருமாள் கோவில் | 451 |
| 3 | திருகச்சியூர் மருந்தீசர் | 448 |
| 4 | ஸ்ரீபெரும்புதூர் பாஷ்யக்காரர் | 397 |
| 5 | திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் | 338 |
| 6 | கும்பகோணம் சிக்குடையார் (காஞ்சிகாமகோடி பீடம்) | 310 |
| 7 | திருவல்லிக்கேணி தெளிசிங்கர் | 259 |
| 8 | திருப்போரூர் கந்தசுவாமி | 249 |
| 9 | திருவளூர் வீரராகவ சுவாமி | 224 |
| 10 | காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் | 208 |
| 11 | மைலாப்பூர் கபாலீஸ்வரர் | 184 |
| 12 | காஞ்சிபுரம் பாலைய பண்டாரம் | 174 |
| 13 | திருமழிசை | 172 |
| 14 | திருஆயர்பாடி கரிகிருஷ்ண சுவாமி | 130 |
| 15 | காஞ்சிபுரம் பிள்ளை லோகாச்சாரியார் | 126 |
| 16 | திருப்பாலவனம் திருப்பாலீஸ்வரர் | 120 |
| 17 | சாந்தோம் பீர்ஜாதா | 118 |
| 18 | காஞ்சிபுரம் கோபாலாச்சாரியார் | 84 |

| | | |
|---|---|---|
| 19 | காஞ்சிபுரம் பெருந்தேவி அம்மன் | 83 |
| 20 | சாலப்பாக்கமுல்லா சாயபு | 69 |
| 21 | திருவிடந்தை நித்யகல்யாண சுவாமி | 59 |
| 22 | காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் | 58 |
| 23 | திருவொற்றியூர் சத்திரம் | 47 |
| 24 | கோவளம் தர்கா | 41 |
| 25 | பாபுராயன்பேட்டை விஜய வரதராஜ சுவாமி | 31 |

கோயில்கள் மட்டுமின்றி காஞ்சிகாமகோடிப் பீடம் சிக்குடையார், காஞ்சிபுரம் புள்ளை லோகாச்சாரியார் ஆகியோரும் 310 மற்றும் 126 கிராமங்களிலிருந்து பங்குகளைப் பெற்று வந்தது கருதத் தக்கது. மேலும் தர்காவும், மசூதியும் இதுபோன்ற பங்குகளைப் பெற்று வந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இவை மட்டுமன்றி சிறப்புடன் விளங்கிய பிராமணர், சமண முனிவர்கள், தாசிகள், பக்கிரிகள் போன்றோரும் சத்திரங்களும் இதுபோன்று பல கிராமங்களிலிருந்து பங்குகளை பெற்று வந்துள்ளனர்.

## கோயில்கள்

நெடுங்காலமாகத் தமிழகத்தில் கோயில்கள் நிலவுடைமை நிறுவனங்களாகவும், நிர்வாக அமைப்புகளாகவும் கல்வி மற்றும் கலாச்சார மையங்களாகவும் திகழ்ந்து மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் இயைந்திருந்தன. 18-ஆம் நூற்றாண்டில் செங்கற்பட்டு பகுதியில் அமைந்திருந்த கோயில்களும் இத்தகு சிறப்பினைப் பெற்றுத் திகழ்ந்ததைச் செங்கற்பட்டு ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது. சுரோத்திரிய உரிமைகள், கிராமமிராசுக்குரிய பல்வேறு வகை மானியங்கள் மற்றும் மேரைகள் போன்றவை இக்கோயில்களுக்கு அளிக்கப்பட்டு வந்ததன் வாயிலாக அவை பெற்றிருந்த சிறப்பினை உணரலாம்.

இந்த 10 ஊர்களையும் சேர்த்து மொத்தம் 122 கோயில்கள் காணப்பட்டன. இவற்றின் மொத்த பரப்பளவு 46 3/8 காணியாகும். இது கிராம மொத்த நிலப்பரப்பில் 0.6 விழுக்காடாகும். மொத்த புறம்போக்கு பகுதியில் 1.7 விழுக்காடாகும்.

இந்தப் பத்து கிராமங்களிலும் பெரும்பாலும் காணப்பட்ட கோயில்களாக ஈஸ்வரன், பெருமாள், அம்மன், பிள்ளையார், பிடாரி ஆகிய கோயில்களைக் குறிப்பிடலாம். இவை தவிர கந்தப்பர் மற்றும் அனுமார் கோயில்களும் இருப்பதைக் காணமுடிகிறது. மேற்கூறப்பட்ட கோயில்கள் பல்வேறுவித பெயர்களில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறாது. காட்டாக ஈஸ்வரன் கோயில்கள், கைலாசநாதர், கச்சபேஸ்வரர், மருந்தீஸ்வரர், செதம்பரீசுவரர்,

வாகீசுவரர், வெங்கீசுவரர், பாலாண்டீஸ்வரர், பூதபுரீஸ்வரர், பிரம்ம நாயனார், அகத்தீசுவரர் என பல்வேறு வித பெயர்களிலும், பெருமாள் கோயில்கள், கோவிந்தராசப் பெருமாள், வரதராச பெருமாள், கல்யாணவரதர், நரசிங்கப் பெருமாள், ஆதிநாராயணப்பெருமாள், வைகுண்டப் பெருமாள் போன்ற பெயர்களிலும், அம்மன் கோயில்கள் ஏகவல்லி, பச்சை நாச்சியார், காமாட்சி போன்ற பல பெயர்களிலும், பிள்ளையார் கோயில்களும், கற்பக விநாயகர், செல்வ வினாயகர், சத்திய வாசகப்பிள்ளையார் போன்ற பல்வேறு வித பெயர்களிலும் காணப்படுகின்றன.

மேற்கூறிய பெரிய கோயில்களுள் எண்ணிக்கை மற்றும் பரப்பளவு ஆகியவற்றில் அதிகமாகக் காணப்பட்டவை ஈஸ்வரன் கோயில்களே எனலாம். இவற்றின் எண்ணிக்கை 15 ஆக இருந்ததைக் காணமுடிகிறது. இவற்றுக்கடுத்தபடியாக பெருமாள் மற்றும் அம்மன் கோயில்கள் அதிகமாகக் காணப்பட்டன. இவை ஒவ்வொன்றின் எண்ணிக்கையும் 12ஆக விளங்கியது. பிள்ளையார் கோயில்களே மற்ற கோயில்களை விட அதிக எண்ணிக்கையில் காணப்பட்டன. இந்தப் பத்து ஊர்களையும் சேர்த்து மொத்தம் 31 பிள்ளையார் கோயில்கள் காணப்பட்டன. பெருநகரில் மட்டும் 13 பிள்ளையார் கோயில்கள் விளங்கியமை குறிப்பிடத்தக்கதாம். இவை இன்று தெருவிற்கு ஒன்றாகக் காணப்படும் பிள்ளையார் கோவில்களை நினைவுபடுத்துகின்றன. சிங்கப்பெருமாள் கோயில் வைணவத்தலமாக விளங்கியமையால் இங்கு ஈசுவரர் கோயில் காணப்படவில்லை. அதுபோலவே திருப்பாசூரில் பெருமாள் கோவில் காணப்படவில்லை. விஷ்ணு பிராமணர் அங்கு அதிகம் இல்லாதிருத்தலே இதற்குக் காரணமாக இருக்கலாம். பெருமாள் கோயில் இருந்த இடங்களில் அனுமார் கோவில்களும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிடாரி கோயில்களும் அனைத்து ஊர்களிலும் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. மேலும் இவற்றிற்கு மானியங்கள் மேரைகள் ஆகியவை வழங்கப்பட்டு வந்ததிலிருந்து பெருந்தெய்வக் கோயில்களுடன் இவையும் சிறப்பிக்கப்பட்டமை புரிகிறது.

இக்கோயில்கள் தவிர சமயச்சான்றோர்களுக்கும் கோயில்கள் அமைக்கப்பட்டிருந்ததைக் காட்டும்விதமாக ஆழ்வார்கோயில், சம்பந்தமூர்த்தி கோயில், சீயர் கோயில் போன்றவை காணப்படுகின்றன.

பெருநகரில் சைனர் கோயில் ஒன்றும் காணப்பட்டது. மேலும் இந்திர வழிபாடு இருந்ததைக் காட்டும் வகையில் இங்கு ஒரு தேவேந்திரன் கோயிலும் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாம். மற்ற ஊர்களைவிட பெருநகரில் கோயில்கள் மிகுதியாக அமையப்பெற்று விளங்கின. இங்குக் காணப்பட்ட மொத்த கோயில்களின் எண்ணிக்கை 35 ஆக இருந்தது.

இதுவரை கூறப்பட்ட கோயில்களைத் தவிர சிறுதெய்வக் கோவில்களும் இவ்வூர்களில் மிகுதியாகக் காணப்பட்டன. உள்ளாவூர், திருப்பாசூர், பெருநகர் ஆகிய மூன்று ஊர்களே சிறு தெய்வக் கோயில்களைக் கொண்டு விளங்கின. சிறு தெய்வங்களுள் தர்மராசா, ஐயனார் மற்றும் வீரபத்திரன் இவை நீங்கலாக சுமார்

15க்கும் மேற்பட்ட பெண் தெய்வக் கோயில்கள் இருப்பதைக் காணமுடிகிறது. இவை பெரும்பாலும் நடுகற் கோயில்களாகலாம். பொற்றாளி அம்மை, செல்லியம்மை, பொன்னி அம்மை, அங்காளம்மை, பாசூர் அமர்ந்தாள், ஆடி அமர்ந்தாள், சேரி அம்மன் எல்லையம்மாள், தீர்ப்பாஞ்சாள், செங்கமநாச்சியம்மன் போன்றவை இவற்றுள் அடங்கும். இவை தவிர, பெண்கள் மட்டுமே சென்று வழிபடுவதற்காகப் பெண்கள் கோயில் என ஒன்றும் உள்ளாவூரில் காணப்படுகிறது.

ஒவ்வொரு ஊரிலும் முக்கியமாக விளங்கும் கோயில்களுக்கு மேரைகள் மற்றும் மானியங்கள் ஆகியவை வழங்கப்பட்டுவந்தன. கோயில்களுக்கு மட்டுமின்றி கோயில் பணியாளர் மற்றும் கோயில் தொடர்புடைய கல்வி கலை கலாச்சார மையங்களுக்கும் இம்மானியங்கள் வழங்கப்பட்டன. இவை கிராம சமுதாயத்தில் கோயில்கள் பெற்றிருந்த சிறப்பினை உணர்த்துகின்றன. பொதுவாக கோயில்களுக்கு அந்தந்த ஊர்களிலிருந்து கிடைத்துவந்த மானியம், மேரை இவற்றுடன் பிற ஊர்களிலிருந்தும் இவை கிடைத்து வந்தன. காட்டாக பின்வரும் 3 கோயில்களும் அவை அமைந்துள்ள கிராமங்களிலிருந்து மட்டுமன்றி வேறு பல ஊர்களிலிருந்தும் பங்கினைப் பெற்று வந்தன. சிங்கப் பெருமாள் கோயில் 451 ஊர்களிலிருந்தும் திருக்கச்சியூர் மருந்தீசுவரர் கோயில் 448 ஊர்களிலிருந்தும் ஸ்ரீ பெரும்புதூர் பாஷ்யகார சுவாமி கோயில் 397 கிராமங்களிலிருந்தும் மேரை மற்றும் மானியம் பங்குகளைப் பெற்று வந்தமை சிறப்பிற்குரியதாம்.

திருப்பாசூரிலும், கோவளத்திலும் மசூதி, தர்கா ஆகியவையும் காணப்பட்டன. கோவளத்தில் பாதிரி கோயில் ஒன்றும் அதைச் சார்ந்த இடமுமாக 25 காணி நிலப்பரப்பு காணப்பட்டது. முக்கிய கோயில்கள் பல ஊர்களிலிருந்தும் மேரை, மானியங்கள் பெற்று வந்ததைப் போல கோவளம் தர்காவிற்கும் 41 இடங்களிலிருந்து பங்குகள் கிடைத்து வந்தன. மேலும் கிராம மிராசுக்குரிய மானியங்களில் மசூதிகளுக்கும் மானியங்கள் அளிக்கப்பட்டு வந்தன. கோயில்கள் மட்டுமின்றி சமயத் தொடர்புடைய மடங்களும் மானியங்களைப் பெற்று வந்தன.